
அருமையான பற்கள் !
உங்கள் பற்கள் வருஷக்கணக்காக வசீகரத்தன்மையுடன் இருக்குமா?
பற்கள் விலை மதிக்கமுடியாத நகைகளைப் போன்றவை. அவை உங்கள் புன்முறுவலை அழகுபடுத்தவோ, கெடுக்கவோ செய்யலாம். சிறு உபாதிகள் பற்களுக்கு தீங்கு விளைவிக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள். தவறாமல் எஸ். ஆர். டூத் பேஸ்டினால் சுத்தம் செய்தால் பற்கள் வெண்மையாகவும், ஆரோக்கியமான ஈறுகளில் உறுதியாகவும் விளங்கும்.
* பல் வைத்தியர்களால் ஈறு வியாதிகளுக்கு கையாளப்படும் ஸோடியம் ரிஸினோலியேட் என்னும் விசேஷ மருந்து சேர்ந்தது.
S.R.
FOR TEETH AND GUMS
GSR. 25-50 TM
D. & W. GIBBS LIMITED, LONDON, ENGLAND

கல்கி
பொருளடக்கம்

மலர் 6
இதழ் 22

1946 டிசம்பர் 29

வியய
மார்கழி 14

நாளது டிசம்பர் 14, 15உகளில் நடந்த இரண்டாவது தமிழ் எழுத்தாளர் மகாநாட்டின் தலைவரும், திறப்பாளரும் தமது இந்த இதழ் அட்டைப் படத்தைச் சோபிக்கச் செய்கிறார்கள்.

சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன்பு சென்னையில் சில இளம் எழுத்தாளர்கள் சேர்ந்து "பித்தன்" என்ற பெயருடன் ஒரு மாதப் பத்திரிகையை நடத்தினார்கள். எந்தத் துறையிலும் புதிய முறையில் காரியம் செய்கிறவர்களுக்கு உலகம் "பைத்தியக்காரர்கள்" என்று பட்டம் சூட்டுவது இயல்பல்லவா? அவ்விதம் மற்றவர்கள் பட்டம் சூட்டுவதற்கு முன்னால் நாமே முந்திக் கொள்ளலாம் என்றுதான் அந்த இளைஞர்கள் தங்கள் புதிய பத்திரிகைக்கும் "பித்தன்" என்று நாமகரணம் செய்தார்கள். அவர்கள் எதிர்பார்த்தது போலவே பத்திரிகை சில காலந்தான் நடந்தது.



மேற்படி "பித்தன்" பத்திரிகையை ஆரம்பித்து நடத்திய இளைஞர்களில் ஒருவர்தான் ஸ்ரீ பெரியசாமி தூரன் என்பவர். கோயமுத்தூருக்கு அருகிலுள்ள பெரியநாயக்கன்பாளையத்தில் ஸ்ரீ அவிநாசிலிங்கம் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டு நடைபெறும் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயத்தின் ஆசிரியராகத் தொண்டு செய்து வருகிறார். அதோடு எழுத்தாளர் உலகத்திலிருந்தும் விலகி விடாமல் அடிக்கடி கட்டுரைகளும் கதைகளும் எழுதி வருகிறார். ஒழுக்கத்துக்கும் தமிழகத்தின் உயர்ந்த பண்பாட்டுக்கும் சிறந்த பிரதிநிதி ஸ்ரீ பெரியசாமி தூரன். தமிழ் நூல்களுக்குப் பரிசு அளிக்கும் திட்டத்தை முக்கிய நோக்கமாகக் கொண்டு புதிதாக ஏற்பட்டிருக்கும் தமிழ்க் கழகத்திற்கு அவர் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருப்பது பெரிதும் பொருத்தமாகும்.

எழுத்தாளர் மகாநாட்டின் திறப்பாளரான நாமக்கல் கவிஞர் ஸ்ரீ ராமலிங்கம் அவர்களைப்பற்றி நாம் புதிதாக ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. அவருடைய "என் கதை"யின் அடுத்த பதிப்பில் இன்னும் சில புதிய அத்தியாயங்களைச் சேர்க்கவேண்டியிருக்கும் என்பதை மட்டும் நினைவூட்டுகிறோம். தமிழுக்கும் தமிழ் எழுத்தாளருக்கும் பிறந்திருக்கும் அதிர்ஷ்டத்தைப் பற்றி அவர் வசனமோ, கவிதையோ, வசன கவிதையோ எழுதித்தான் ஆகவேண்டும்.

நீங்கள் பிரியப்படும் கறிகளுக்கு டால்டா சுவையளிக்கிறது—மேலும் உங்களுக்கு ஊக்கத்தையும் கொடுக்கிறது!



டால்டாவினுல் சமையல்செய்த உணவு பழுதாகாது! எளிதில் ஜீரணமாகின்றதும், விடமின் நிரம்பியதுமான டால்டா, வழக்கமாக உட்கொள்ளும் தின்பண்டங்களைக் கூட அதன் இனிய வாசனையால் ருசியுள்ள தாக்குகிறது—அதனுல் உங்களுக்கு தினமும் சாப்பிடும் உணவுகளின்மேல் சலிப்பு ஏற்படுவதில்லை. டால்டாவினுல் சமையல் செய்யுங்கள். இச்சுத்தமான சமையலுக்குதவும் சாதனத்தின் அறிந்த சத்தைத்தரும் திறமையைக் கொண்டு உங்கள் உணவைச் சீர்படுத்திக் கொள்ளுங்கள். டால்டா சமையலுக்குகந்த சாதாரண வஸ்து அன்று என்பது ஞாபகமிருக்கட்டும் — அது குடும்பங்களை ஆரோக்கியமுடையதாகச் செய்யும்; அவர்களுக்கு அதிகப்படியான ஊக்கத்தையும் அளிக்கும்.

* ஆங்கிலத்தில் மட்டும் எழுதப்பட்டுள்ள டால்டா சமையல் புத்தகத்தின் உதவியுடன் உங்கள் சாப்பாட்டுத் திட்டத்தை அமையுங்கள். சத்தைத் தரும் திறமைக்கென ஆராய்ந்தெடுத்த சுவையுள்ள 150-க்கு மேற்பட்ட இந்தியத் தின்பண்டங்களைப் பக்குவம் செய்யும் முறைகள் இதில் அடங்கியிருக்கின்றன. உங்கள் புத்தகத்திற்கு Dept. B461 P.O. Box No. 353, Bombay, என்ற விலாசத்திற்கு காலணு ஸ்டாம்பு அனுப்புங்கள்.



HVM. 49-59 TM THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 22

என்ன சேதி?

ஜின்னாவின் பூச்சாண்டி!

காய்தே ஆஜம் ஜின்னா அவர்கள் எகிப்திலே செய்திருக்கும் ஒரு பிரசங்கத்தில், எகிப்திய மக்களுக்கு வரப்போகும் ஒரு பயங்கரமான ஆபத்தைச் சொல்லியிருக்கிறார். இந்தியா முழுவதிலும் ஹிந்துக்கள் ஆதிக்கம் வலுத்தால் மத்திய கிழக்கிலுள்ள முஸ்லிம் நாடுகளுக்கு அபாயமென்றும் ஹிந்துக்கள் முஸ்லிம் நாடுகளை ஜயித்துக் கொள்வார்களென்றும் சொல்லியிருக்கிறார்.

பாகிஸ்தானை ஏற்படுத்துவதற்கு ஜனாப் ஜின்னாவுக்கு முஸ்லிம் நாடுகளின் உதவி தேவையாயிருக்குமானால், அதை அப்படியே தெளிவாகச் சொல்லி உதவி கேட்கலாம். அதற்காக ஹிந்துக்களைப் பூச்சாண்டியாக அவர் உபயோகித்திருக்க வேண்டியதில்லை. எகிப்துக்கும் எகிப்து மக்களுக்கும் ஹிந்துஸ்தானத்தை ஆயிரக் கணக்கான வருஷங்களாகத் தெரியும். இந்தியா ஒரு காலத்திலும் மற்றொரு நாட்டை ஆக்கிரமித்தது கிடையாது என்பதும் எகிப்து மக்களுக்கு நன்கு தெரியும். ஆகையால் எகிப்து இந்தியாவைப் பார்த்துப் பயப்படாது — பயப்படுவதற்குக் காரணமும் இல்லை.

இரண்டாவது நாடகம்

முதலாவது லண்டன் நாடகம் முடிந்தது. நேருவையும் ஜின்னாவையும் லண்டனுக்கு அழைத்து, இந்திய அரசியலைச் சர்வ குழப்பமாகவும் சர்வ சிக்கலாகவும் ஆக்குவதில் பிரிட்டிஷ் சர்க்கார் பூரண வெற்றியடைந்தார்கள்.

இரண்டாவது நாடகத்துக்கு ஆளைத் தேடிப் பார்த்தார்கள். எகிப்திலிருந்து யாரும் வருவதாகக் காணோம். பாலஸ்தீனத்திலிருந்தோ, குண்டுகள் தான் வருகிறதே யொழியத் தலைவர்கள் யாரும் வருவதாகத் தெரியவில்லை. கடைசியில், பிரிட்டிஷ் சர்க்கார் பர்மாவைத் தேடிப் பிடித்தார்கள். பர்மாவிலிருந்து நான்கு தலைவர்களை லண்டனுக்கு வரும்படியாக அழைத்திருக்கிறார்கள்.

பர்மிய சர்க்கார் நிர்வாக சபை உப தலைவரான மேஜர் ஜெனரல் ஆங் ஸான் இந்த டிசம்பர் மாதக் கடைசிக்குள் பர்மாவின் சுதந்தரத்தை பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், இல்லாவிட்டால் மேற்படி சுதந்தரத்தைப் பெறுவதற்காகப் பர்மாவில் ஒரு பெரிய பொதுஜனப் போராட்டம் ஆரம்பமாகுமென்றும் பயமுறுத்தினார். பிரிட்டிஷ் சர்க்கார் இதற்கு அஞ்சியே பர்மியத் தலைவர்களை லண்டனுக்கு அழைத்திருக்கிறார்கள். பர்மாவிலே பரிபூரண ஒற்றுமை இருப்பதால், அங்கே பிரிட்டன் நாடகம் நடத்துவதற்கு பர்மியத் தலைவர்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

மீசையில் மண் ஒட்டவில்லை!

ஐக்கிய தேச மகாசபையில் இந்தியாவை எதிர்த்துத் தோற்றுப்போன ஜெனரல் ஸ்மட்ஸ், தாம் குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்கிறார். தென்னாப்பிரிக்கா தோற்றுப் போனதற்கு அவர் ஒரு விநோதமான காரணம் சொல்லுகிறார். ஐக்கிய தேச மகாசபையில் வெள்ளைக்கார நாடுகளைக் காட்டிலும் கறுப்பு நாடுகளே அதிகமாக இருப்பதாகவும், கறுப்பு நாடுகள் எல்லாம் இந்தியாவுக்குச் சாதகமாக வோட்டளித்து விட்டதாகவும் அவர் பிரலாபிக்கிறார்.

ஜெனரல் ஸ்மட்ஸ் தாம் தோற்றுப் போனதற்கு இதை ஒரு நொண்டிச் சாக்காகச் சொல்லியிருக்க வேண்டுமே தவிர, இதில் உண்மை எதுவும் இல்லை. எல்லாக் கறுப்பு நாடுகளும் இந்தியாவை ஆதரித்து விடவில்லை. எல்லா வெள்ளை

நாடுகளும் தென்னாப்பிரிக்காவை ஆதரிக்கவில்லை. உண்மையைச் சொல்லப்போனால், இந்தியாவின் சார்பாக மேற்படி மகாசபையில் தீர்மானம் கொண்டு வந்த பிரான்ஸ், மெக்ஸிகோ என்ற இரு நாடுகளும் அசல் வெள்ளைக்கார நாடுகளாகும். ஒரு வேளை, அவை இந்தியாவுக்காக வேலை செய்த குற்றத்திற்காக, ஜெனரல் ஸ்மட்ஸ் அவற்றையும் கறுப்பு நாடுகளில் சேர்த்து விட்டாரோ என்னவோ?

குறுக்கு வழியா?

நமது சென்னை சர்க்கார் பதவியேற்றது முதல் இதுவரை எத்தனையோ விரோதமான—மூக்கில் விரலை வைக்கத் தக்க — காரியங்கள் செய்து வந்திருக்கிறார்கள். அத்தனை விரோதமான காரியங்களையும் தூக்கியடிக்கத் தக்க ஒரு மகா விரோதமான காரியத்தையும் இப்போது அவர்களே செய்திருக்கிறார்கள்.

சம்பள உயர்வு கோரி வந்த அஸ்திவார உத்யோகஸ்தர்களுக்கு இப்போது போனஸ் கொடுப்பதென்று அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். இந்த போனஸ் திட்டத்தின்படி, பொதுவாக ஒவ்வொருவருக்கும் ஒரு மாதச் சம்பளம் கிடைக்கும். குறைந்த பட்சம் ரூபாய் இருபதுக்கும் அதிக பட்சம் ரூபாய் 150-க்கும் மேலே போகக் கூடாது என்பது இதன் முக்கிய ஷரத்துக்களிலே ஒன்றாகும்.

இதுவரை எந்த சர்க்காரும் தங்கள் ஊழியர்களுக்குப் போனஸ் கொடுத்ததாகத் தெரியவில்லை. பெரிய வர்த்தகக் கம்பெனிகளும் தனிப்பட்ட காரியாலயங்களுமே போனஸ் கொடுப்பது வழக்கம். அஸ்திவார உத்யோகஸ்தர்கள் தங்களுக்கு போனஸ் வேண்டுமென்று ஒரு காலத்திலும் கேட்கவில்லை. விலைவாசிகள் அதிகமாயிருக்கும் இந்தப் பஞ்ச காலத்தில் தங்கள் சம்பளத்தைத்தான் கொஞ்சம் உயர்த்த வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அப்படியிருக்க, பிரகாசம் சர்க்கார் ரொம்பவும் கருணையுடன் போனஸ் கொடுக்க முன் வந்திருப்பதற்குக் காரணம் இருக்க வேண்டும். இப்படி போனஸ் என்ற பெயரால் ஏதாவது கொஞ்சம் பணத்தைக் கொடுத்துவிட்டால் சம்பள உயர்வுப் பிரச்னையைத் தட்டிக் கழித்து விடலாம் என்று அவர்கள் குறுக்கு வழியில் யோசனை செய்கிறார்களோ என்னவோ?



1946-ம் வருஷம் முடியப்போகிறது. இந்த வருஷத்தில் ஆசியா கண்டத்திலுள்ள அடிமை நாடுகள் தங்கள் சுதந்திர முட்டைகளைக் குஞ்சு பொறிக்கும் சக்தியைப் பெறவில்லை. இருந்தாலும் அவை தங்களுடைய முட்டைகளைக் குஞ்சு பொறிக்கும் வரையில் ஏகாதிபத்தியப் பிசாசினிடமிருந்து சர்வ ஜாக்கிரதையாகக் காப்பாற்றிக் கொள்ளும்.

நிகழ்ச்சிச் சித்திரம்



மறுபடியும் விஜயம் ஆனார்!

உலகத்திலே எத்தனையோ பிரமுகர்கள், பெரியார்கள், பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள். பலவான்களும், சக்திமான்களும் இருக்கிறார்கள். அவர்களுக்குள்ளே யெல்லாம் மிகவும் பலசாலியும், சக்தி வாய்ந்தவருமான பெரிய மனிதர் யார் என்று கேட்டால், ம-ா-ா-ஸ்ரீ மகா கனம் பொருந்திய ஸ்ரீமான் முட்டுக்கட்டையார் என்றுதான் சொல்ல வேண்டும். அந்தப் பெரிய மனிதருக்கு உள்ள சக்தி அபாரம். எவ்வளவு பெரிய தேர் ஆனபோதிலும், எத்தனை பேர் சேர்ந்து இழுத்த போதிலும், ஸ்ரீமான் முட்டுக்கட்டையார் மனது வைத்தால் சக்கரத்தில் அகப்பட்டுக்கொண்டு தேரை நிறுத்தி விடுவார். அந்தப் பெரிய மனிதரைச் சக்கரத்தின் இடுக்கிலிருந்து அப்புறப் படுத்திய பிறகுதான் மேலே தேரை ஓட்ட முடியும்.

இந்தியாவின் சுதந்திரத் தேர் விஷயத்தில் நமது நண்பர் முட்டுக் கட்டையார் பெரிதும் பட்சபாத முள்ளவர் என்பதை நேயர்கள் அறிவார்கள். சுதந்திரத் தேரின் சக்கரத்தில் அவர் அடிக்கடி அகப்பட்டுக் கொண்டு தேரை நிறுத்தி வந்திருக்கிறார்.

மிஸ்டர் முட்டுக் கட்டையாரின் லீலைகள் ஒருவாறு முடிந்து விட்டன என்றும், இனிமேல் தேர் விடாமல் ஓடித் தனது நிலைக்குப் போய்த்தான் நிற்கும் என்றும் நாம் எல்லாரும் எண்ணிக்கொண்டிருந்த சமயத்தில், அந்தப் பெரிய மனிதர் மறுபடியும் திடீர் விஜயம் செய்திருக்கிறார்!

அவருடைய விஜயத்தின் காரணமாக இந்திய அரசியல் நிர்ணய சபை முக்கிய காரியம் எதுவும் செய்யாமலேயே அடுத்த 1947-ம் வருஷம் ஜனவரி மாதம் 20உ-க்குத் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது.

* * *

குறிப்பிட்ட தேதி தவறாமல் டிசம்பர் மீ 9உ இந்திய அரசியல் நிர்ணய சபை புதுடில்லியில் கூடியது. ஆரம்பச் சடங்குகள் எல்லாம் ஒழுங்காக நடைபெற்றன. அரசியல் நிர்ணய சபையின் நிரந்தர அக்கிராசனராக பாபு ராஜேந்திர பிரஸாத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரைப் பாராட்டிப் பேராசிரியர் ராதாகிருஷ்ணன், ஸ்ரீமதி சரோஜினி தேவி முதலியவர்கள் அழகாகப் பேசினார்கள். ஸ்ரீ ராஜேந்திரரும் அக்கிராசன சிம்மாசனத்தில் அமர்ந்தார்.

பின்னர், அரசியல் நிர்ணய சபையின் இலட்சியம் இன்னதென்பதை விவரிக்கும் முக்கியமான தீர்மானத்தைப் பண்டித ஜவாஹர்லால்ஜி பிரேரேபணை செய்தார். "இந்தியா தேசம் முழுவதும் பூரண சுதந்திர ஜனநாயகக் குடியரசை ஏற்படுத்துவதுதான் அரசியல் நிர்ணய சபையின் இலட்சியம்" என்பதை மேற்படி தீர்மானம் வற்புறுத்தித் தெளிவுபடுத்திக் கூறியது.

தீர்மானத்தைத் தீவிரமாக ஆதரித்து அங்கத்தினர் பலர் பேசினார்கள். ஒரு சிலர் தீர்மானத்தை ஆதரித்த போதிலும், "இந்தக் கூட்டத்தில் இதை நிறைவேற்ற வேண்டாம்; அடுத்த கூட்டத்துக்குத் தள்ளிப் போடலாம்" என்று சொன்னார்கள்.

இப்படிச் சொன்னவர்களில் முக்கியமானவர்கள் டாக்டர் எம். ஆர். ஜயக்கரும், டாக்டர் அம்பேத்கரும் ஆவர்.

சுதேச சமஸ்தானங்களின் பிரதிநிதிகளும், முஸ்லிம் லீக் பிரதிநிதிகளும் அரசியல் நிர்ணய சபைக்கு வந்த பிறகு மேற்படி இலட்சியத் தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்றும், இப்போதே நிறைவேற்றினால் மேற்படியார்களை அரசியல் நிர்ணய சபைக்கு வரச் செய்வதைக் கஷ்டமாக்குவதாகு மென்றும் டாக்டர் ஜயக்கர் சொல்லி, ஒத்திப் போடும் பிரேரணை கொண்டு வந்தார்.

அதை ஆதரித்து டாக்டர் அம்பேத்கர் பேசிய பேச்சு எல்லாரையும் தூக்கிவாரிப் போடச் செய்வதாயிருந்தது. "இந்தியா ஒரு தேச

மாகத்தான் இருக்கப் போகிறது: இந்தியாவிலுள்ள எல்லாச் சமூகங்களும் ஒற்றுமையாகத்தான் வாழப் போகின்றன!'' என்று டாக்டர் அம்பேத்கர் வாயினால் வந்தது அனைவருக்கும் மகிழ்ச்சி யளிக்கும் அதிசயமா யிருந்தது. எனவே, தீர்மானத்தைத் தள்ளிப் போடுவது உசிதம் என்று அவர் சொன்னதற்கு அதிக மரியாதை ஏற்பட்டது.

வேறு சிலரோ, ''தீர்மானத்தைத் தள்ளிப் போடவே கூடாது. இந்தக் கூட்டத்திலேயே நிறைவேற்றியாக வேண்டும்'' என்று வெகு தீவிரமாகப் பேசினார்கள். நமது சென்னை மாகாணத்தின் பிரதிநிதிகளான ஸர் என். கோபாலசாமி ஐயங்கார் என்ன, ஸர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் என்ன, இத்தகைய நிதானஸ்தர்கள் கூட ''தீர்மானத்தை இப்போதே நிறைவேற்றியாகவேண்டும்!'' என்று வற்புறுத்தினார்கள்.

ஆனபோதிலும், நமது மாபெரும் காங்கிரஸ் தலைவர்கள், மேற்படி சுதந்திர இலட்சியத் தீர்மானத்தை அடுத்த கூட்டத்துக்குத் தள்ளி வைப்பது என்று முடிவு செய்தார்கள்.

எனவே, குற்றமற்றதும் யாரும் ஆட்சேபிக்கக் கூடாததுமான அத் தீர்மானத்தை அடுத்த அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்துக்குத் தள்ளிப் போடப் பட்டிருக்கிறது.

எப்படியாவது தேசத்தில் சமரசம் ஏற்பட வேண்டும், சமூக ஒற்றுமை ஏற்பட வேண்டும், அரசியல் நிர்ணய சபைக்கு அனைவரும் வந்து ஏகமனதாக எல்லாரும் அங்கீகரிக்கக் கூடிய முடிவுகளைச் செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர்கள் கொண்டிருக்கும் உறுதியே மேற்கண்ட முடிவுக்குக் காரணமாகும்.

மற்றப்படி, மேற்படி தீர்மானத்தை இந்தக் கூட்டத்திலேயே நிறைவேற்றியிருந்தால் யாரும் எந்தவித ஆட்சேபமும் சொல்லி யிருக்க முடியாது.

* * *

நமது மாபெரும் காங்கிரஸ் தலைவர்களின் ஒற்றுமை விருப்பமும், சமரசப் பற்றும், பொறுமையும், நிதானமும் மற்றொரு முக்கியமான காரியத்திலும் சமீபத்தில் வெளியாகி யிருக்கிறது. வருகிற ஜனவரி மீ 5௳ அ. இ. கா. கமிட்டியைக் கூட்டக் காரியக் கமிட்டியார் தீர்மானித்திருப்பதைத்தான் குறிப்பிடுகிறோம்.

அரசியல் நிர்ணய சபையின் பி, சி தொகுதிகளில் சேரும்படி மாகாணங்களைப் பலவந்தப் படுத்தலாமா?—என்னும் பிரச்னைதான் இப்போது இந்தியாவின் சுதந்திரத்துக்கு முட்டுக் கட்டையாக ஏற்பட்டிருக்கிறது என்பதை நேயர்கள் அறிவார்கள்.

இந்தப் பிரச்னை காரணமாகவே முஸ்லிம் லீக் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபைக்கு வராமல் இருக்கிறார்கள்.

இந்தப் பிரச்னை சம்பந்தமாகவே இம்மாத ஆரம்பத்தில் பண்டித நேரு, ஜனாப் ஜின்னா முதலியவர்கள் இங்கிலாந்துக்கு அழைக்கப்பட்டார்கள்.

அவர்கள் போய் வந்ததினால் பிரச்னை தீர்ந்து விடவில்லை.

ஏற்கெனவே அது சம்பந்தமாக ஏற்பட்டிருந்த குழப்பம் இன்னும் அதிகமாகி யிருக்கிறது.

மே மீ 16௳ பிரிட்டிஷ் மந்திரிகள் வெளியிட்ட திட்டத்தில், மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண அரசாங்கத்துக்கும் மத்தியில் ''நீர்ங்கு (பி, சி) தொகுதிகளாகச் சேர்ந்துகொள்ள மாகாணங்களுக்கு உரிமை உண்டு'' என்று கண்டிருக்கிறது.

''சேர்ந்து கொள்ள உரிமை உண்டு'' என்றால், சேர்ந்து கொள்ளாமலிருக்கவும் உரிமை உண்டா, இல்லையா என்பதுதான் முக்கிய பிரச்னை.

''இல்லை; சம்பந்தப்பட்ட மாகாணத்துக்கு இஷ்டமில்லா விட்டாலும் கட்டாயமாகச் சேரத்தான் வேண்டும்'' என்று முஸ்லிம் லீக்கினர் சாதிக்கின்றனர்.

இது விஷயமான சந்தேகத்தைப் பெடரல் கோர்ட்டுக்குக் கொண்டு போய் அந்தக் கோர்ட்டின் தீர்ப்பை ஒப்புக் கொள்வதாகக் காங்கிரஸ் தலைவர்கள் சொன்னார்கள்.

இத்தகைய வியாக்யானத் தகராறு இருந்தும், காங்கிரஸ் தலைவர்கள் இடைக்கால சர்க்கார் அமைக்கும்படி அழைக்கப் பட்டார்கள்.

இப்போதோ, பிரிட்டிஷ் சர்க்கார், தங்களுடைய கருத்து முஸ்லிம் லீக் வியாக்யானத்தை ஒட்டியதுதான்

என்று தெளிவாகத் தெரிவித்து விட்டார்கள்.

"பெடரல் கோர்ட் வேறுவிதமாகத் தீர்மானித்தாலும் நாங்கள் ஒப்புக் கொள்ள முடியாது" என்று பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு புறமும், ஜனாப் ஜின்னா ஒருபுறமும் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த நிலைமையில் மேற்படி பிரச்னையைப் பெடரல் கோர்ட்டுக்குக் கொண்டு போவதால் என்ன பிரயோஜனம்? யாருக்குப் பிரீதி?

பிரயோஜனம் ஒன்றுமில்லை; யாருக்கும் பிரீதியும் இல்லை.

அரசியல் நிர்ணய சபைக்கும் பெடரல் கோர்ட்டுக்குமே அதனால் கௌரவக் குறைவுதான் ஏற்படும்.

எனவே, மேற்படி பிரச்னையைப் பெடரல் கோர்ட்டுக்குக் கொண்டு போவதில்லை என்று காங்கிரஸ் காரியக் கமிட்டியார் முடிவாகத் தீர்மானித்திருக்கின்றனர்.

பெடரல் கோர்ட்டுக்குப் போவதில்லை என்றால், வேறு என்ன செய்வது? பிரிட்டிஷ் சர்க்காரின் வியாக்யானத்தை அப்படியே ஒப்புக் கொண்டு விடுவதா?

ஒப்புக் கொண்டால், வங்காளத்துடன் சேர விருப்பமில்லாத அஸ்ஸாமையும், பஞ்சாப்புடன் சேர இஷ்டப்படாத எல்லைப்புற மாகாணத்தையும் பலி கொடுப்பதாக முடியுமே!

அல்லது, "முஸ்லிம் லீக்கினர் வராமல் போனால் போகட்டும்; மற்ற எல்லாச் சமூகங்களும் கட்சிகளும் வந்திருப்பதே போதும். முஸ்லிம் லீக்கினர் இல்லாமலேயே அரசியல் நிர்ணய சபையை நடத்திக்கொண்டு போகலாம்" என்று தீர்மானிப்பதா?

இந்த வழியிலும் சில சங்கடங்கள் இருக்கின்றன.

"முஸ்லிம் லீக்கினர் இல்லாத அரசியல் நிர்ணய சபையை நாங்கள் ஒப்புக் கொள்ள மாட்டோம்" என்று பிரிட்டிஷ் சர்க்கார் சொல்லலாம்.

அப்படி நேர்ந்தால், "அரைப் பிடடா பாரத பட்டா!" என்று பழையபடி பிரிட்டிஷ் சர்க்காருடன் சுதந்திரப் போர் நடத்தும்படியாக ஏற்படும்.

இப்படிப்பட்ட நெருக்கடியான நிலைமையில் மேற்கொண்டு என்ன செய்வது என்று தீர்மானிக்கும் பொறுப்பைக் காரியக் கமிட்டியார் தாங்களே ஏற்றுக் கொள்ள விரும்பாமல் அகில இந்தியக் கமிட்டியைக் கூட்டுவதென்று முடிவு செய்திருக்கிறார்கள்.

மேற்படி முடிவை வெளியிடும் காரியக் கமிட்டியின் நீண்ட தீர்மானம் பொறுமைக்கும் நிதானத்துக்கும் எல்லை கோலுவதாயிருக்கிறது.

பிரிட்டிஷ் சர்க்கார் எவ்வளவு தூரம் முன்னுக்குப் பின் முரணாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும், பேசியிருக்கிறார்கள் என்பதையும் அந்தத் தீர்மானம் நன்கு எடுத்துக் காட்டுகிறது.

முஸ்லிம் லீக் எவ்வளவு தூரம் வீண் பிடிவாதம் பிடித்திருக்கிறது என்பதையும், அதன் கோரிக்கை எவ்வளவு நியாயமற்றது என்பதையும் அத்தீர்மானம் நன்கு விளக்குகிறது.

ஆனாலும், மாகாணங்களின் சுய நிர்ணயத்துக்குப் பங்கம் நேராத முறையில் முஸ்லிம் லீக்குக்காக எவ்வளவு தூரம் விட்டுக் கொடுத்துச் சமரசமாகப் போகலாமோ அவ்வளவு தூரம் போகத் தயாராயிருப்பதாகவும் தெரிவிக்கிறது.

* * *

"பொறுத்தார் பூமி ஆள்வார்" என்பது தமிழில் வழங்கும் பிரபலமான பழமொழி. இந்தப் பழமொழியில் உண்மை உண்டு என்றால், நமது காங்கிரஸ் மாபெருந் தலைவர்கள் இந்தப் பாரத புண்ணிய பூமியை ஆளப் போகிறார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. அரசியல் நிர்ணய சபையில் அவர்கள் கடைப் பிடித்திருக்கும் முறையையும், காரியக் கமிட்டியின் கடைசித் தீர்மானத்தையும் விட நம் காங்கிரஸ் தலைவர்களின் எல்லையற்ற பொறுமைக்கு வேறு என்ன சான்றுகள் வேண்டும்?

எனவே, இந்தியாவின் சுதந்திரத்துக்கு இதுவரையில் நேர்ந்திருக்கும் எத்தனையோ முட்டுக் கட்டைகளை நீக்கி விட்டு நம் தலைவர்கள் முன்னேறி வந்ததுபோல், இந்தக் கடைசி முட்டுக் கட்டையையும் அப்புறப் படுத்தி வெற்றி மாலை சூடுவார்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

வாழ்க தமிழ்மொழி

சில காலமாகத் தமிழ் நாட்டில் தமிழ் அன்பும் தமிழ் வளர்ச்சியில் ஆர்வமும் பொங்கிப் பெருகுவதைப் பார்த்து வருகிறோம். "வாழிய செந்தமிழ்!" "வாழ்க தமிழ் மொழி!" என்னும் முழக்கங்களைத் தமிழ் நாடெங்கும் கேட்டு வருகிறோம். பாரதியார், நாமக்கல் கவிஞர் முதலியவர்களின் பாடல்களே தமிழர்களின் தமிழபிமானத்தைத் தூண்டிவிட்டு வளர்த்து வந்திருக்கின்றன. தமிழை வளர்ப்பதற்காகச் சங்கங்கள் தோன்றி யிருக்கின்றன; மகாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. தமிழ்ப் பத்திரிகைகளும் தமிழ்ப் புத்தகங்களும் அபரிமிதமாகப் பெருகி வந்திருக்கின்றன. தமிழ் எழுத்தாளர்களும் தமிழ் படிப்பவர்களும் ஒன்றுக்கு நூறு மடங்காகப் பெருகி யிருக்கிறார்கள்.

இப்படி யெல்லா மிருந்த போதிலும் மற்ற பாஷைகளோடு ஒப்பிடும்போது தமிழ் மொழியின் வளர்ச்சி அவ்வளவு திருப்திகரமான முறையில் ஏற்பட் டிருப்பதாகச் சொல்ல முடியாது.

இதற்குக் காரணம், தமிழர்களின் தமிழ் அன்பையும் ஆர்வத்தையும் நல்ல முறையில் ஒழுங்கான பாதை வகுத்துப் பயன்படுத்தப் பிரயத்தனம் செய்யப்படாததுதான்.

தமிழ் மொழிக்குப் பழைய பெருமை எவ்வளவோ இருக்கிறது. மற்ற எந்தப் புராதன பாஷைக்கும் எள்ளளவும் குறையாத சிறப்பு தமிழ் மொழிக்கு உண்டு. ஆனால் அந்தப் பழம் பெருமை மட்டும் போதாது. தற்காலத்தில் உலகில் சிறந்து விளங்கும் ஆங்கிலம் முதலிய புது மொழிகளுக்குச் சமமான சிறப்பைத் தமிழ்மொழி அடைய வேண்டும். இத்தகைய சிறப்பைத் தமிழ் மொழிக்கு அளிப்பதற்குத்தான் தற்காலத் தமிழ் அன்பர்கள் பிரயத்தனம் செய்ய வேண்டும்.

மேலே நாம் கூறி யிருப்பதில் புதுமை ஒன்றும் இல்லை. எத்தனையோ தடவை எவ்வளவோ பேர் மேற்கண்டவாறு பேசி யிருக்கிறார்கள், எழுதி யிருக்கிறார்கள்.

ஆனால் மேற்படி இலட்சியத்தைக் காரியத்தில் நிறைவேற்றுவதற்குத் தகுந்த முறையில், பலமான அஸ்திவாரத்துடன், இது வரையில் பிரயத்தனம் தொடங்கப் படவில்லை.

நாளது 1946-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் அத்தகைய பிரயத்தனம் தொடங்கப் பட்டிருப்பது குறித்து அளவில்லாத மகிழ்ச்சி அடைகிறோம்.

நமது கல்வி மந்திரி ஸ்ரீ அவிநாசிலிங்கம் அவர்களின் குறையாத உற்சாகத்தினாலும் தளராத முயற்சியினாலும் "தமிழ் வளர்ச்சிக் கழகம்" என்ற பெயருடன் நாளது டிசம்பர் 17உ யன்று ஒரு ஸ்தாபனம் அமைக்கப்பட் டிருக்கிறது.

ஆண்டு தோறும் தமிழ் மொழியில் வெளியாகும் புத்தகங்களைப் பரிசீலனை செய்து, கவிதை, கதை, சரித்திரம், பௌதிகம் முதலிய பகுதிகளாகப் பாகுபாடு செய்து, ஒவ்வொரு பகுதியிலும் வெளியாகும் சிறந்த நூலுக்குப் பரிசு வழங்குவது தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் முக்கிய நோக்கம் என்று அறிகிறோம்.

இவ்விதம் ஆண்டு தோறும் வெளியாகும் சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்குவதை ஒரு பெரிய வைபவமாகக் கொண்டாடுவது கழகத்தின் உத்தேசம் என்றும் தெரியவருகிறது.

மேற்படி திட்டத்தின் கீழ்க் கொடுக்கப் படும் பரிசுத் தொகையை ரூ. 500 என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஏற்பாட்டில் பரிசுத் தொகை பிரதானமான காரியமல்ல வென்றும், தமிழ் அறிஞர்களின் பாராட்டுதல்தான் பிரதான விஷயம் என்றும் அறிவிக்கப்படுகிறது.

எழுத்தாளருக்குப் பணம் வேண்டிய தில்லை யென்றாவது, பாரதியாரைப் போல் வறுமையில் ஆழ்ந்திருந்தால்தான் மேதை பிரகாசிக்கும் என்றாவது இந்த நாளில் யாரும் சொல்லுவதில்லை. மேற்படி கொள்கை அபத்தமானது என்பதை

இப்போது எல்லாரும் ஒத்துக் கொள்வார்கள். பாரதியாருக்குப் பணக் கஷ்டம் இல்லாமலிருந்திருந்தால் அவருடைய மேதை இன்னும் எவ்வளவோ பிரகாசித்திருக்கக் கூடும். இன்னும் எத்தனையோ தெய்விகக் கவிதைகளைத் தமிழ் உலகம் அடைந்திருக்கக் கூடும்.

அதிர்ஷ்டவசமாக இந்தக் காலத்தில் தமிழ் எழுத்தாளரின் பொருள் வருவாய் ஓரளவு உயர்ந்திருக்கிறது. பாரதியாரின் காலத்திலே இருந்ததுபோல் விலை கொடுத்துப் புத்தகம் வாங்கிப் படிப்போர் இந்த நாளில் அருமையாக இருக்கவில்லை. தமிழ்ப் புத்தகங்கள் நல்ல முறையில் வெளியாகின்றன; நல்ல விலை கொடுத்து அவற்றைத் தமிழர்கள் வாங்கிப் படிக்கிறார்கள்.

மனிதர்கள் பணத்தினால் மட்டும் உயிர் வாழ்வதில்லை; அதிலும் எழுத்தாளர்களும் கலைஞர்களும் பண வருவாயைக் கொண்டு மட்டும் திருப்தி அடைவதில்லை. பணத்தைப் போலவே அறிஞர்கள் ரஸிகர்களின் பாராட்டுதலும் அவர்களுக்கு அவசியம். பெரும்பாலோர் விஷயத்தில் பணத்தைக் காட்டிலும் பாராட்டுதல் அதிக அவசியம்.

எனவே, தமிழ் வளர்ச்சிக் கழகத்தையும், அந்தக் கழகத்தார் நடத்தி வைக்க எண்ணியிருக்கும் பரிசுத் திட்டத்தையும் நாம் மனப்பூர்வமாக வரவேற்று வாழ்த்துகிறோம்.



புது டில்லியில் உள்ள தமிழ் அன்பர்களும் கலை அன்பர்களும் சேர்ந்து ''கலா மந்திர்'' என்னும் கலைக் கழகத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள். ''கலா மந்திர''த்தின் ஆரம்ப விழா கல்வி - கலை மந்திரியான ராஜாஜி அவர்களால் நடத்திவைக்கப்பட்டது.

தி இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ்: ''இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்'' வடக்கு பீச் ரோடு, மதராஸ்

லோகல் ஆபீஸ்கள் : எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு, மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர்

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும், பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.


★

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	69,96,600
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ.	50,79,613
ரிஸர்வ் நிதி	ரூ.	56,87,200
டெபாஸிட்டுகள் 30-6-46 முடிய	ரூ.	17 கோடிக்கு அதிகம்

★

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர், செக்ரடரி



தயாரிப்பவர்கள் :
தி செளத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை

ஏஜண்டுகள் :—ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ், நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3 ; சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா ; கிரிஜா மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி ; எம். கி. எ. ஹாஜா & கோ., 20, டாம் தெரு, கொழும்பு.

எல்லாம் அவரே!

அம்புலு



ராதை பிறந்த வீட்டுக்கு வந்து ஒரு மாத மாகிறது. அவள் தமையன் வெங்கடேசனுக்குக் கல்யாணமாகி, மன்னி வீட்டுக்கு வந்த பிறகு அவள் வரவேயில்லை. வெங்கடேசன் அவளைத் தன்னுடன் வந்து இரண்டு மாதங்கள் இருக்கும்படி எவ்வளவோ கடிதங்கள் எழுதினான். ஆனால் ராதைக்கு அவள் வீட்டை விட்டு வர முடியவில்லை. இப்பொழுது அவள் தாயாருக்கு உடம்பு ரொம்ப அசௌக்கியமாக இருக்கிறதென்று வெங்கடேசன் கடிதம் எழுதினதின் பேரில், பம்பாயை விட்டு வந்தாள், தாயாரைப் பார்ப்பதற்காக. வந்த பிறகு அவளை ஒரு மாதம் கழித்துத்தான் அனுப்புவேன் என்று வெங்கடேசனும் அவன் மனைவி விமலாவுமாகச் சேர்ந்து நிறுத்திவிட்டார்கள்.

வீட்டில் ராதையில்லாமல் அவள் கணவர் ஒரு நாள் பொழுதுகூடத் தள்ளுவது கஷ்டம். ஒரு பெரிய கம்பெனியில் பொறுப்பு வாய்ந்த வேலையில் இருப்பதால் அவருக்கு வீட்டைக் கவனிக்க முடியாது. இதை அவள் எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும் அவர்கள் கேட்கவில்லை.

ராதை கல்யாணமானவுடனேயே புருஷனுடன் பம்பாய்க்குப் போய்விட்ட படியால் அந்த ஊர் வழக்கங்கள் அவளுக்குப் பிடித்துப் போய்விட்டன. ராதை இயற்கையிலேயே நல்ல தைரியசாலி. அங்கு போன பிறகு தானே ஸ்டோருக்குப் போய் சாமான் வாங்கிக் கொண்டு வரவும், கடைக்குப் போய்க் கறிகாய்கள் வாங்கிக் கொண்டு வரவும் தனியாக ரயில் பிரயாணம் செய்யவும் அவளுக்குப் பழகிப் போய்விட்டது.

ஆனால் இங்கேயோ எல்லாம் நேர் விரோதம். மன்னி விமலாவுக்கு வீட்டு வாசற்படியே தெரியாது! என்றைக்காவது சினிமாவுக்கோ கோயிலுக்கோ அல்லது சிநேகிதர்கள் வீட்டுக்கோ அண்ணா அழைத்துக் கொண்டு போனால்தானுண்டு; மன்னி எங்கேயும் தானாகப் போகமாட்டாள்.

வீட்டுக்குத் தேவையான சாமான்களை அண்ணாவே வாங்கிக் கொண்டு வந்து விடுவான். வேளா வேளைக்குச் சமைத்துப் போட்டுவிட்டு ஓய்வு நேரத்தைப் பூவேலை செய்தோ, அல்லது புஸ்தகம், பத்திரிகை எதையாவது படித்தோ வீட்டுக்குள்ளேயே பொழுதைப் போக்கிவிடுவாள் விமலா. இது ராதைக்கு ஆச்சரியமாக இருந்தது.

★

ஒரு நாள் அதிகாலையில் வெங்கடேசன் ஸ்டோருக்குச் சாமான் வாங்கப் போனான். அங்கே ரொம்பக் கூட்டமாக இருந்ததால் திரும்பி வர நாழியாகி விட்டது. வீட்டுக்கு வந்ததும் ஆபீஸுக்கு நாழியாகி விட்டதென்று பறந்தான். மத்தியானம் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொள்ளுகிறேன் என்று சொல்லி விட்டுக் கோட்டை மாட்டிக் கொண்டு ஆபீஸுக்கு வேகமாக ஓடினான்.

இதைப் பார்க்க ராதைக்குக் கஷ்டமாக இருந்தது. வெங்கடேசன்பேரில் இருந்த இரக்கத்தில், "மன்னி! நான் இங்கே இருக்கிற வரையிலாவது இந்த வேலையை நான் செய்து விடுகிறேன். அண்ணாவை இந்த மாதிரி ஆபீஸ் இருக்கிற நாட்களில் ஸ்டோருக்கு அனுப்பாதே!" என்றாள்.

அது முதல் ராதைக்கு ஸ்டோருக்குப் போவது, கடைக்குப் போவது, அம்மாவை டாக்டரிடம் அழைத்துக் கொண்டு போவது, ஏதாவது முக்கியமான சமாசாரமாக இருந்தால் அண்ணாவுக்கு டெலிபோன் பண்ணுவது முதலிய சில்லறை வேலைகளை ராதை செய்ய வேண்டியதாயிற்று. இதனால் அவளுக்கும் பொழுது போயிற்று. வெங்கடேசனுக்கும் ஓய்வு கிடைத்தது.

தாற்காலிகமாக ஓய்வு கிடைத்த சந்தோஷத்தில் ஒரு நாள் வெங்கடேசன் எல்லாருமாகப் பேசிக் கொண்டிருந்த பொழுது ராதையைப் பார்த்து, "உன்னைப் போல் ஒருத்தி எனக்கு வந்திருக்கக் கூடாதா?

வீட்டுக் கவலையே இல்லாமல் சுகமாக இருப்பேனே!'' என்றான்.

"என், விமலாவுக்கு என்னவாம்?'' என்று கேட்டாள் ராதை.

"விமலாவுக்கு ஒன்றுமில்லை; நன்றாகத் தான் இருக்கிறாள். ஆனால் துளிக்கூடச் சாமர்த்தியமே கிடையாது. எல்லாவற்றுக்கும் என் பிராணனையே வாங்குகிறாள்!'' என்றான் வெங்கடேசன்.

"அது யார் குற்றம்? உன்னுடையது தானே? நீ அவளைச் செல்லமாக வைத்துக் கொண்டால் அவளும் செல்லமாக இருக்கிறாள். இதனால் அவள் சாமர்த்தியமில்லாதவள் என்று சொல்லமுடியுமா?'' என்று கேட்டாள் ராதை. விமலாவின் முகத்தில் புன்னகை பூத்தது.

★

அன்று வெங்கடேசனின் தாயார் தன் பிள்ளையிடம் "ராதை ஊருக்குப் போவதற்குள் சுமங்கலிப் பிரார்த்தனை பண்ணிவிடு. நம்ம வீட்டில் சுமங்கலிப் பிரார்த்தனை செய்து ரொம்ப நாளாகி விட்டது!'' என்றாள்.



விமலாவும் கூடச் சேர்ந்துகொண்டு, "ஆமாம், நானும் அப்பொழுதே நினைத்தேன். நாளை சாயங்காலம் ஆபீஸிலிருந்து வரும்போது கேசவன் கடையில் நல்லதாகப் பார்த்து ஒரு புடவை எடுத்துக் கொண்டு வந்துவிடுங்கள். நாளைக்கு மறுநாள் வெள்ளிக்கிழமையாகையால் அன்றைக்கே சுமங்கலிப் பிரார்த்தனை பண்ணிவிடலாம்'' என்று சொன்னாள்.

விமலா சொன்னதை ராதையால் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. "ஐயே, மன்னி! உன்னைப்போல ஊரில் யாருமே இருக்க மாட்டார்கள்! நீயும் ஆறாவது பாரம் வரையில் படித்த பெண் தான்; அண்ணாவும் பழைய கர்நாடக மனிதனல்ல. பின் ஏன் இந்த நாடகம் நடிக்கிறீர்கள்? சுமங்கலிப் பிரார்த்தனைக்கு அண்ணாவாகப் பார்த்துப் புடவை வாங்கிக் கொண்டு வருவது என்றால் அது ஆகிற காரியமா? பிறகு அந்தப் புடவை நமக்குப் பிடிக்காமற் போனால் தொந்தரவுதானே? வா, நாளைக்கு நாமே கடைக்குப் போய்ப் பார்த்து வாங்கிக் கொண்டு வரலாம்'' என்றாள்.

விமலாவுக்குச் சிரிப்பு வந்தது. "இல்லை, அக்கா! உங்கள் அண்ணாவுக்குப் புடவை வாங்கத் தெரியும். பேஷான புடவையாக வாங்கிக் கொண்டு வருவார். நீங்கள் வேண்டுமானால் பாருங்கள்!'' என்று சொன்னாள்.

"சரி, உன் இஷ்டம்'' என்று சொல்லி விட்டு ராதை பேசாமலிருந்தாள்.

மறுநாள் சாயங்காலம் வெங்கடேசன் ஆபீஸிலிருந்து வந்ததும் காகிதத்தில் சுற்றியிருந்த இரண்டு புடவைகளை ராதையிடம் கொடுத்து, "புடவை நன்றாக இருக்கிறதா, பார்!'' என்றான்.

ராதை முதலில் ஒரு புடவையின் மேலிருந்த காகிதத்தைப் பிரித்து விட்டுப் புடவையைப் பார்த்தாள்.

அது அகலமாக ஜரிகைக் கரை போட்ட ஆரஞ்சுக் கலர் புடவை. பட்டும் நெசவும் உயர்ந்த ரகமாகையால் புடவை கண்ணைப் பறித்தது.

"சுமங்கலிப் பிரார்த்தனைக்கு ஆரஞ்சுக் கலர் ரொம்பவும் எடுத்தது. புடவையும் நன்றாக இருக்கிறது!'' என்று சொல்லி விட்டு ராதை இன்னொரு புடவையைப் பிரித்தாள்.

அது ஜரிகைக் கொடி வேலை செய்த கரையும் தலைப்பும் உடைய ஆகாய நீலக் கலர் புடவை. பார்க்கும் போதே மனதைக் கவர்ந்தது. ராதை பக்கத்திலிருந்த விமலாவைப் பார்த்துச் சிரித்தாள். பிறகு அண்ணா

விடம், "இந்தப் பொம்மை போன்ற மன்னியின் உடம்புக்கு இந்தப் புடவை எவ்வளவு அழகாக இருக்கும், தெரியுமா? இவ்வளவு பொருத்தமாக உனக்குப் பார்த்து வாங்கத் தெரியுமென்று நான் சொப்பனத்திலும் நினைத்ததில்லை, அண்ணா!" என்று உணர்ச்சி ததும்பக் கூறினாள் ராதை.

★

வெள்ளிக்கிழமை சமங்கலிப் பிரார்த்தனை நடந்தது. அன்று சாயங்காலம் ராதையும் விமலாவும் புதுப்புடவை அணிந்து கொண்டு அம்மாளை நமஸ்காரம் பண்ணினார்கள். சமங்கலிப் பிரார்த்தனையின் போது ஆரஞ்சுக் கலர் புடவை ராதைக்குக் கொடுக்கப்பட்டது. ராதை புதுப்புடவை கட்டிக் கொள்ளும்போது விமலாவுக்கும் ஆசையாக இருக்கும் என்று முன் கூட்டியே நினைத்து வெங்கடேசன் அவளுக்காக வாங்கிய ஆகாயக் கலர்ப் புடவையை விமலா கட்டிக்கொண்டாள். "நான் எண்ணினதுபோல் இந்தக் கலர் உனக்கு எவ்வளவு எடுத்துக் காட்டுகிறது தெரியுமா, மன்னி?" என்று ராதை எவ்வளவு புகழ்ந்தாலும் விமலாவுக்குத் திருப்தி ஏற்படவில்லை. உள்ளே வேலை செய்துகொண்டிருந்தாலும் அவள் கண்கள் அடிக்கொரு தடவை வாசற் பக்கம் போய்க் கொண்டிருந்தது. விமலா அண்ணாவின் வருகைக்காகப் பார்க்கிறாள் என்று தெரிந்துகொண்ட ராதை அவன் ஆபீஸிலிருந்து வந்ததும் ஓடிப்போய், "அண்ணா! நீயே பார்த்துவிட்டுச் சொல்லு. இந்தப் புடவை மன்னிக்கு அழகாயிருக்கிறதா, இல்லையா? நீ சொல்லாவிட்டால் அவள் கவலை தீராது!" என்று சொல்லி அவன் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டுபோய் விமலாவின் எதிரில் நிறுத்தினாள்.

அழகும் மென்மையுமான சரீரத்தில் மிருதுவான பட்டைச் சுற்றிக் கொண்டு மிரள மிரள மான்போல் விழித்துக் கொண்டு நின்ற விமலாவைப் பார்த்து, "இந்தப் புடவையை உன் மன்னியைவிட அழகானவர்கள் கட்டிக்கொண்டால் இன்னும் சோபிக்கும்!" என்றான் வெங்கடேசன் விஷமத்துக்காக.

உடனே விமலாவின் கண்களில் அருவியாய்க் கண்ணீர் பெருகிற்று. "நான் அழகாக இல்லைதான்! தெரிந்திருந்தும் இந்தப் புடவையை எதற்காக எனக்கு வாங்கித் தந்தீர்கள்?" என்று கேட்டுவிட்டுச் சரேலென்று உள்ளே போய்விட்டாள்.

"விளையாட்டுக்குக் கூடச் சொல்லக் கூடாதா?—விமலா! விமலா!" என்று கூப்பிட்டுக்கொண்டே வெங்கடேசனும் விமலாவைத் தொடர்ந்து உள்ளே போனான். சற்று நேரத்துக்குப் பின் இருவரும் வெளியே வந்தார்கள். இருவரின் முகமும் மலர்ந்திருந்தது.

"ஏதாவது சினிமாவுக்குப் போய்விட்டு வரலாம். வருகிறாயா, ராதை?" என்று வெங்கடேசன் ராதையைக் கேட்டான். ராதை சம்மதித்தாள். விமலா, ராதை, வெங்கடேசன் மூவரும் அம்மாளை வீட்டைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு, சினிமாவுக்குப் போனார்கள்.

அங்கே வெங்கடேசனும் அவன் செல்ல மனைவியும் படத்தில் கருத்தைச் செலுத்தியிருக்க, ராதையின் மனம் அவள் வாழ்க்கையிலேயே முதல் தடவையாகச் சஞ்சலத்தில் ஆழ்ந்தது.

"ஒரு ஆண் பிள்ளைக்கு இருக்கும் தைரியமும் திறமையும் எனக்கு இருந்து என்ன பயன்? நான் என்ன சுகத்தைக் கண்டேன்? அல்லது, அவர்தான் என்ன சுகத்தைக் கண்டார்? 'எல்லாம் அவரே!' என்று நிம்மதியாக இருக்கும் இந்த விமலாவின் ஒரு நாளைய வாழ்வுக்கு எதுவுமே ஈடாகாது! 'பாவம், பேதை! ஒன்றும் தெரியாதவள்!' என்று விமலாவைப் பார்த்து இரங்கினேனே, அது தவறு! அண்ணாவும் உயர்ந்த நாகரிகமும், வாழ்க்கை ரகசியமும் தெரிந்தவன்தான்!" என்று எண்ணிப் பெருமூச்சு விட்டாள்.

"இங்குள்ளவர்களே எனக்குரிய அண்ணாவின் வாழ்க்கை முறையைப் பின்பற்றுகிறவர்கள்தான்!' என்று நினைத்தபோது, ராதைக்குப் பம்பாயை விட்டுச் சென்னைக்கே வந்துவிட வேண்டும் போல் இருந்தது.

மறுநாள் ராதை, தான் புறப்பட்டு வரும் தேதியைக் குறிப்பிட்டுக் கணவருக்குக் கடிதம் எழுதினாள். கடிதத்தின் கடைசியில், "தங்களால் ஸ்டேஷனுக்கு வர முடியுமா?" என்று கேட்டிருந்தாள். அந்தக் கடிதத்தைப் படித்ததும் கட்டாயம் ராதையின் கணவன் ஸ்டேஷனுக்கு வருவான், ராதையை அழைத்துக் கொண்டு போக. ஆனால் ராதைக்குத் தனியாகவே வருவதற்குத் தைரியம் இருக்கும் போது, அவ்வாறு ஏன் எழுதினாள் என்பது மட்டும் அவள் கணவனுக்குத் தெரியவே இல்லை!



கம்பர் தரும் காட்சி

★ ★ ★

162. அடடா என்ன சமர்த்து!

சீதை என்னத்தைக் கேட்டு விட்டாள்? காட்டில் ஒரு மான். அது அழகாய் இருந்தது. அதை வளர்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். பிடித்துத் தரச் சொன்னான். ஏதோ ஒரு சபலம் அவளுக்கு. சரி, பிடித்துத் தருகிறேன் என்று சொல்லி விட்டு மான் நின்ற இடத்தை நோக்கிச் சென்றான் ராமன்.

மான் என்ன செய்தது?

மெல்ல நடந்தது. துள்ளிக் குதித்தது. பறப்பதுபோல் காலு குளம்பையும் மார்பில் கூட்டி வைத்துக் கொண்டு வெகு தூரத்துக்குத் தாவியது. மலைச் சரிவில் சஞ்சரித்த ஒரு மேகத்துக்குள் பாய்ந்து மறைந்தது. கைக்குள் வந்தது போல் நின்றது; அடுத்த விநாடியில் காணாமல் எங்கேயோ போய்விட்டது.

மாரீசன் இந்த விதமாக எல்லாம் ராமனை அலைக்கழித்தான். கடைசியில் இதற்குமேல் ஏமாற்றம் செய்வதற்குத் தன்னிடம் ஒன்றும் இல்லை என்று எண்ணி விட்டான். பிடிக்கிறது என்கிற காரியம் இனிக் கிடையாது. அம்பு கொண்டு தன்னை மாய்க்க ராமன் எண்ணி விட்டான் என்ற முடிவுக்கு வந்து விட்டான் அரக்கன்.

சந்தம்

தான தன்னன
தன்னன தன்னன

'பற்று வான்இனி
அல்லன் : ப கழியால்ச்
செற்று, வாளிச்
செலுத்தல்உற் றான்'என

மற்(று)அம் மாய
அரக்கன்ம னக்கொளா,
உற்ற வேகத்தின்
உம்பரின் ஓங்கினான்.

[பற்றுவான் இனி அல்லன்: ராமன் இனி நம்மைப் பிடிக்க மாட்டான்; பகழியால்ச் செற்று: அம்பு எய்து நம்மைக் கொன்று; வாளிச் செலுத்தல் உற்றான் என: வானுலகத்துக்கு அனுப்பிவிட எண்ணிஇருந்தான் என்று; மற்று அம் மாய அரக்கன் மனக் கொளா: அந்த மாரீசன் நிச்சயம் கொண்டவனாய்; உற்ற வேகத்தில்: அந்த பயம் காரணமாக ஏற்பட்ட வேகத்தில்; உம்பரின் ஓங்கினான்: ஒரு குதி குதித்தான் ஆகாயத்தில்—தப்பி ஓடிவிட.]

அந்த க்ஷணத்தில்த்தானே, செங்காவி பூசிய ஒரு கொடிய அம்பை எய்தான் ராமன்.

அக்க ணத்தினில்
ஐய னும் வெய்யதன்,—
சக்க ரத்தில்த்—
தகை(வு)அரி தாயதோர்
செக்கர் மேனிப்
பகழிசெ லுத்தினான்;—
'புக்க தேகம்புக் (கு)
இன்னுயிர் போக்'கென.

[அக்கணத்தில்: அந்த க்ஷணத்தில்தானே; ஐயனும் வெய்ய தன்: ராமனும் பயங்கரமான தன்னுடைய; சக்கரத்தில்: விஷ்ணு ஏந்தியுள்ள சக்கராயுதத்தை ஒத்ததான; தகைவு அரிதாயதோர்: தடுப்பது என்பது முடியாதது ஒரு; செக்கர் மேனிப் பகழி செலுத்தினான்:

வெந்த நிறத்ததான அம்பை எய்தான்; புக்க தேகம்புக்கு: இந்த மான் தோலுக்குள் புகுந்துள்ள அரக்கனது தேகம் இருக்கிறதே அந்த தேகத்துக்குள் புகுந்து; இன்னுயிர் போக்குவது: இதுவரை காத்து வந்த அருமையான உயிரைத் தீர்ப்பாயாக என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டுதானே.

குறிப்பு:—கடைசி அடியில் ஒரு நாஸ்ய பாவம். அரக்கர்களைத் தொலைப்பது அவ்வளவு எளிது என்ற அலக்ஷ்யத்திலிருந்து வந்த நாஸ்யம்.]

ராமனுடைய அம்பு நெஞ்சில் தைத்ததோ இல்லையோ, வாயைத் திறந்து ஒரு கூக்குரல் இட்டான் மாரீசன்.

தெட்டி லைச்சரம்
வஞ்சனை நெஞ்சுறப்
பட்ட(து); அப்பொழு—
தேபகு வாயினால்
அட்ட திக்கினும்
அப்புற மும்புக
விட்(டு)அ ழைத்(து), ஒரு
குன்றென வீழ்ந்தனன்.

[தெட்டிலைச்சரம்: நீண்ட இலை முகத்தோடு கூடிய அம்பு; வஞ்சனை நெஞ்சு உறப்பட்டது: மாரீசனது வஞ்சனை மயமான நெஞ்சில் ஆழமாய்த் தைத்துவிட்டது; அப்பொழுதே பகு வாயினால்: தைத்த மாத்திரத்திலேயே தன் அகன்ற வாயினால்; அட்ட திக்கினும் அப்புறமும் புக: எட்டுத் திசையிலும் அதற்கு அப்பாலும் கேட்கும்படி; விட்டு அழைத்து: கூக்குரல் இட்டு அலறி; ஒரு குன்றென வீழ்ந்தான்: ஒரு மலை விழுந்ததுபோல விழுந்தான்.]

தான் துரத்தியது மான் அல்ல என்றும் மான் வேஷம் பூண்ட அரக்கன் தான் என்றும் ராமனுக்கு முதலிருந்தே தெரியுந்தான். ஆனால் இனந் தெரியாது. யாரோ ஒருவன் தொலையட்டும் என்று வேட்டையாடுகிற ஒரு வகையான உல்லாசத்தோடு அம்பை எய்தான். ஆனால், மடிந்து வீழ்ந்தவனை உற்றுப் பார்த்ததும் மாரீசன் என்று தெரிந்து விட்டது. அப்போதுதான் தம்பி லக்ஷ்மணன் எவ்வளவு துல்லியமாக அக்கம் பக்கத்திலுள்ள விஷயங்களைக் கவனித்து வந்திருக்கிறான் என்பது ராமனுக்குத் தெரிய வந்தது. தம்பியின் திறமையை அப்படியே அதிசயிக்கிறான்:

வெய்ய வன்,தன்
உருவொடு வீழ்தலும்,
செய்ய(து) அன்றெனச்
செப்பிய தம்பியை,
'ஐயன் வல்லன்! என்
ஆருயிர் வல்லன்! நான்
உய்ய வந்தவன்
வல்லன்!' என்(று) உன்னினான்.

[வெய்யவன்: கொடிய சிந்தையோடு வந்த மாரீசன்; தன் உருவொடு வீழ்தலும்: தன் சுய ரூபத்தோடு தரையில் விழவும்; செய்யது அன்று எனச் செப்பிய தம்பியை: உத்தேசிக்கும் காரியம், அதாவது மானைப் பிடிக்கும் காரியம் சரியான காரியம் அல்ல என்று சொன்ன தம்பியை எண்ணியவனாய்; ஐயன் வல்லன்: என் அப்பன் லக்ஷ்மணன்—அடடா, எவ்வளவு சமர்த்து! என் ஆருயிர்: எனக்கு உயிருக்கு உயிரான லக்ஷ்மணன்; நான் உய்வதற்காக அவதரித்த மூர்த்தி லக்ஷ்மணன்; என்று உன்னினான்: என்று மிக்க ஆர்வத்தோடு மனதிற் சிந்தித்தான்.]

அன்பும் வியப்பும் கலந்த உணர்ச்சியானது அபூர்வமான பாவம் கொண்டு செய்யுளில் வெளிவந்திருக்கிறது. ராமனுடைய பாத்திரம் எப்படித் துலங்குகிறது பாருங்கள்!



நரை மயிர் உள்ளவர்களுக்கு மேற்கண்ட முறையில் வெள்ளை நிறச் சவுரி தயார் செய்யலாம் என்று நமது சித்திரக்காரர் யோசனை கூறுகிறார்.



இந்தியாவின் பலவகைப்பட்ட தொழில்களுக்கு ஏற்ற முறையில் உற்பத்தி செய்யப்பட்ட எங்கள் தயாரிப்புகள் சிலவற்றை மேலே காணலாம்.

JENSON & NICHOLSON

MAKERS OF PAINTS



இசைவானத்தில் ஒப்பற்ற ஓர் புதிய ஜோதி!
திருச்சிராப்பள்ளி
ஏ.ஐ.ஆர். ஆர்கெஸ்ட்ராவின்
அற்புதமான புதிய ரிகார்டு!
N. 18937 { ராக தாள மாலிகா
ஸ்ருதி பேதம்
மற்றும் இரண்டு புதிய ரிகார்டுகள்!
சங்கீத கலாமாருதம்
S. ராமநாராயண ஐயர்
N.18297 { கானாமுதபானம்
2 பாகங்கள்
(ஹரிகாம்போஜி)
நாதஸ்வர வித்வான் திருவாவடுதுறை (கக்காயி)
T.N.R. நடராஜசுந்தரம் பிள்ளை
N.18939 { நீயே கதி — 2 பாகங்கள்
(வஸந்த பைரவி)
பிரபல
ஐ.என்.ஏ பாட்டுகள்
(ஹிந்துஸ்தானி)
N. 16757 { கதம் கதம் பர்ஹாய் ஜா
அஜாத்கரோ அஜாத்கரோ
எல்லா அந்தஸ்துபெற்ற வியாபாரிகளிடமும் கிடைக்கும்
"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"
HIS MASTERS VOICE
M. SAMUEL

திருகுப் பூ



— கிரிஜா —

பாரம்பரியமாய்த் தங்கள் தொழிலை விடாது நடத்தி வரும் பத்தர் குலத்திலே, நான் பரமேசுவரப் பத்தரின் தவமகனாய்ப் பிறந்தேன். எனக்குப் பிறகு என் அம்மாவின் ஆசைக்கு ஒரு தங்கையும் பிறந்தாள்.

"நீங்க 'லொட்டு, லொட்டு'ன்னு தட்டினதே போதும்; நம்ம ராசவாச்சும் நாலு எழுத்துப் படிச்சு ஒரு வேலைக்கு வரட்டும்" என்பாள் என் தாயார். என் தகப்பனார் ஏளனமாகச் சிரிப்பார். "இந்த உதவாக்கரைப் படிப்பால் என்ன புரட்டிப் புடலாம்னு நெனைச்சே? கையில் சுத்தியலைப் புடிச்சா நாளொன்னுக்குப் பத்து ரூபாய் சம்பாதிச்சுப் புடலாமே!" என்பார்.

என்னுடைய அம்மாவின் ஆசைப்படி கொஞ்ச காலம் படித்தேன். எட்டாவது வகுப்பில் முட்டி போடவே என் தகப்பனார் என்னைப் பிடித்துப் பட்டறையில் உட்கார வைத்தார். முதன் முதலில் நான் செய்தது சின்னஞ் சிறிய வெள்ளிக் காப்பும், கொலுசும்தான். பண்ணையார் வீட்டில் பிறந்த அருமைப் பேரக் குழந்தைக்கு இரண்டே தினங்களில் இதைச் செய்து கொடுக்கச் சொன்னார்கள். 'அளவு இல்லையே?' என்று நான் சொன்னதும் என் தகப்பனார் சிரித்தார். பிறகு குழந்தைக்குக் கால் பெருவிரல் அளவில் கால் காப்பும், கைப் பெரு விரல் அளவில் கை வளையலும் செய்வதுதான் வளமை என்பதைப் பிறகு தெரிந்து கொண்டேன்.

பட்டறையில் உட்கார்ந்து சுத்தியலைக் கையில் பிடித்த அன்றிருந்தே என் உடலிலும் நல்ல ரத்தம் ஊறத் தொடங்கியது. ஐந்தே வருஷத்தில் என்னைக் கண்டு யாரும்




அதிசயிக்கும்படி மடமடவென்று வளர்ந்து விட்டேன்.

எங்கள் குல வழமைப்படி என் தாயும், தகப்பனாரும் எனக்குப் பெண் பார்க்கப் புறப்பட்டார்கள். என் தாயாருக்குத் தன் தம்பி மகள் சம்பகத்தை என் தலையில் கட்ட வேண்டும் என்று ஆசை. இது என் தகப்பனாருக்குச் சம்மதமாகவே இல்லை. நான் படித்த படிப்பின் உதவியால் பல கதைப் புத்தகங்களைப் படிப்பதுண்டு. ஆகவே, என் மாமன் மகள் சம்பகம் என் காதற் கண்களுக்குப் பிடிக்கவில்லை.

தற்செயலாக நடந்த சம்பவந்தான். 'கோர்ட்' விஷயமாக என்னைப் பக்கத்து ஊருக்கு அனுப்பினார் என் தகப்பனார். நான் தேடிவந்த மனிதரின் வீட்டை விசாரித்துத் தெரிந்துகொண்டு, தடதடவென்று அவர் வீட்டுக்குள் நுழைந்து விட்டேன். அடுத்த நிமிஷம் நான் செய்து விட்ட பெரிய தவறை உணர்ந்ததும் திடுக்கிட்டு நின்றுவிட்டேன்.

“யார் ஐயா, நீ? திறந்த வீட்டில் மாடு நுழைகிற மாதிரி நுழைகிறாயே?” என்ற அதிகாரக் குரல் என்னைத் திடுக்கிடச் செய்தது. சட்டென்று நிமிர்ந்தவன் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டேன். ஆ! எதிரில் நின்ற அந்தப் பெண்...!”

என் காதல் ராஜ்யத்தில் நானும் ஒரு பெண்ணைக் கற்பனை செய்து வைத்திருந்தேன். ஆனால் என் எதிரில் நின்ற பெண்ணோ என் கற்பனைப் பெண்ணையும் தோற்கடித்து விட்டாள்! ஆச்சரியத்தால் ஸ்தம்பித்தவன் மெள்ளச் சுதாரித்துக் கொண்டு சட்டென்று வெளி வாயிலுக்கு வந்து உட்கார்ந்து கொண்டேன்.



சிறிது நேரத்தில் நான் தேடிவந்த நடேசப் பத்தரும் வந்து சேர்ந்தார். நான் அவருடன் பேசவேண்டிய விஷயங்களை முடித்துக் கொண்டு கிளம்பினேன். ஆனால், என் மனது கிளம்பாமல் முரண்டுக்கு இழுத்தது. “கொஞ்சம் தாகத்திற்குத் தரீங்களா?” என்று கேட்ட வண்ணம் சிறிது தயங்கினேன். என் எண்ணம் பலித்தது. “உள்ளே வா தம்பீ, தாகத்துக்குத் தருகிறேன்” என்று சொல்லிப் பத்தரும் என்னை உள்ளே கூட்டிச் சென்றார்.

"தங்கச்சி! கொஞ்சம் நல்ல தண்ணீர் கொண்டு வா!" என்று பத்தர் சொன்ன சிறிது நேரத்தில் கூசாச் செம்பில் தண்ணீருடன் கன ஒய்யாரமாக வந்தவள், என்னைக் கண்டதும் சட்டென மறைவில் நின்று செம்பை மட்டும் பத்தரிடம் நீட்டினாள். அதே சமயம் அவள் அழகான கண்ணிரண்டும் என்னைச் சுற்றி வட்டமிட்டுத் திரும்பின.



எங்கள் குலத்தில் இத்தகைய அழகான பெண்ணை நான் பார்த்ததே இல்லை. ஏன், பார்க்கவே முடியாது. எப்படியோ விசாரித்து நடேசப் பத்தரைப் பற்றியும், அவருடைய பெண்ணைப் பற்றியும் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். எங்கள் அந்தஸ்தைக் காட்டிலும் நடேசப் பத்தரின் அந்தஸ்து மிக உயர்ந்ததுதான். இருந்தாலும் நடேசப் பத்தர் நினைத்தால் அந்தப் பெண்ணை எனக்குக் கட்டிக் கொடுக்கலாம்.

எப்படித்தான் எனக்கு அந்தத் தைரியம் வந்ததோ! எப்படியோ திக்கித் திணறி என் தகப்பனாரிடத்தில் விஷயங்களை ஒருவாறு சொல்லியும் விட்டேன். அது மெல்ல என் தாயார் வரை சென்றது. அவ்வளவுதான்; வந்துவிட்டது ஆபத்து!

"வேறு இடத்தில் பெண் எடுப்பதா? என் தம்பிமார் என்னை ஏசிக் காட்ட மாட்டார்களா? இத்தனை நாளாகத் தம்பி வீட்டில் பெண் எடுப்பதாய்ச் சொல்லி விட்டு, இப்போது எவனோ மானம் பார்த்த நாங்கிக்காரக் கழுதை வீட்டில் பெண் எடுப்பதாம்! அந்தப் பொண்ணு நமக்கு அடங்கி நடக்காது! வேண்டாம்; இப்பவே சொல்லி விட்டேன்" என்று இரைந்தாள்.

இதுவரை நான் என் தாயார் சொல்லைத் தட்டி நடந்தவனே யல்ல. ஆனால் இந்தப் பெண் விஷயத்தில் மட்டும் கடவுளே வந்து சொன்னால்கூட என்னை அசைக்க முடியாது என்று சொல்லி விட்டேன். கடைசியில் வேறு வழியின்றி என் தாயாரும் ஒருவாறு சம்மதித்தாள். மறு தினமே என் தகப்பனார் 'பெண் பேச' நடேசப் பத்தரின் வீட்டுக்குப் புறப்பட்டார்.

எத்தனையோ இடையூறுகளையும், கஷ்டங்களையும் கடந்துதான் எங்கள் கலியாணம் நடந்தது. மட்டற்ற இன்பத்தை அனுபவிக்க நான் தயாரானேன்.

எந்த நேரத்தில் என் மனைவி தங்கம் என் வீட்டில் காலடி எடுத்து வைத்தாளோ, அந்த நேரம் முதல் என் தாயாரின் மனம் இரும்பாக மாறியது. 'தங்கம்' என்ற பெயர் எனக்கு எத்தனைக் கெத்தனை இனிப்பாக இருந்ததோ, அத்தனைக் கத்தனை அந்தப் பெயர் என் தயாருக்கு வேம்பாகக் கசந்தது. தங்கத்தின் மீதும் குற்றம் இல்லாமல் இல்லை. செல்வத்தில் பிறந்து வளர்ந்த அவள் என்னைக் கலியாணம் செய்து கொள்ளச் சம்மதித்ததே என் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். தாயற்ற தங்கத்தை அவள் இஷ்டம் போல் விட்டு மிகவும் செல்வமாய் வளர்த்து விட்டார் நடேசப் பத்தர். அந்தச் செல்வச் செருக்கோடு அவள் நடப்பது எனக்கு இன்பமாகவே இருந்தது. ஆனால் என் தாயாருக்கோ அவை ஒவ்வொன்றும் மன்னிக்க முடியாத குற்றமாகப் பட்டது. எப்படியோ காலம் போய்க் கொண்டிருந்தது.

எங்கள் வீட்டுக் கொல்லையில் பூத்துக் குலுங்கி நிற்கும் மாதுளை மரத்தடியில் இரவு வெகு நேரம் வரை நானும், தங்கமும் உட்கார்ந்து பேசிக்கொண் டிருப்போம்—சிரித்து விளையாடி மகிழ்வோம். பால் போன்ற நிலவிலே கன ஒய்யாரமாக மாதுளை மரத்தில் சாய்ந்து நிற்கும் தங்கத்தைக் கண்டு சந்தோஷத்தால் பூரித்துப் போவேன். அவளுடைய அழகான உதட்டுடன் மாதுளை மொட்டை ஒப்பிட்டு மகிழ்வேன். பூத்துக் குலுங்கி நிற்கும் அம் மாத்தடியே எங்களுக்கு மன்மத மாளிகையாக இருந்தது.

ஒரு நாள் நாங்கள் மாதுளை மரத்தடியில் இருந்தபோது, "இத்தனை நாளும் நான் உங்களை எதுவுமே கேட்டதில்லை. இப்போது நான் கேட்பதைக் கொடுப்பீர்களா?" என்றாள் தங்கம்.

அந்தக் குழைவில் மயங்கி நின்ற நான், "தங்கம்! நீ கேட்பதைக் கூட நான் கொடுக்காமல் இருப்பேனா?" என்றேன்.



"அப்படியானால் இந்த மாதுளை முத்துப் போன்ற கல் வைத்து இழைத்து எனக்கொரு 'திருகுப் பூ' செய்து கொடுப்பீர்களா?" என்றாள்.

நான் சிரித்தேன். "அட, பூ! இதுக்காகவா இத்தனை ஆர்ப்பாட்டம்?" என்றேன்.




மெள்ளமெள்ள மாதுளை முத்துப் போன்ற சிவப்புக் கற்களைச் சேர்த்து, 'திருகுப் பூ' செய்யத் தொடங்கியும் விட்டேன்.

இப்பொழுதெல்லாம் என் அம்மாளுக்கும், தங்கத்துக்கும் மனத்தாங்கல் அதிகரித்துக் கொண்டே வந்து, தினம் பொழுது விடிந்தால் சண்டையாக இருந்தது. அன்று எதிலோ மூண்ட சண்டை பெரிதாகி விடவே நானும் பட்டறையை விட்டு எழுந்து உள்ளே போனேன். என்னைக் கண்டதும் என் அம்மாள், "இதோ பாரு, ராசு! இனி இரண்டு பேரும் சேர்ந்து இந்த வீட்டுக்குள்ளே இருக்க முடியாது! ஒண்ணு அவள் வெளியேற வேண்டும்; இல்லாட்டி நான் வெளியேற வேண்டும். இரண்டில் ஒண்ணு தீர்த்துப்புட்டுத்தான் நீ இங்கிருந்து அப்பால் நகரணும்!" என்று பெரிதாகக் கத்தினாள்.

நான் தங்கத்தின் முகத்தைப் பார்த்தேன். அவள் முகம் அழுதழுது வெளுத்துப் போயிருந்தது.

"என்ன அம்மா? தினம் இப்படி நீங்கள் சச்சரவு இட்டுக் கொண்டிருந்தால் நான் எப்படிப் பட்டறையில் வேலை செய்வது? அதுதான் அறியாதது; எல்லாம் அறிந்த நீங்க கூட......"

நான் முடிப்பதற்குள்ளாகவே என் தாயார் இடைமறித்து, "அட பாவிப் புள்ளே! அதுவா அறியாதது? நீ இப்படி இடம் கொடுத்துத்தான் அதன் கர்வம் அதிகமாய்ப் போய்விட்டது. இத்தனை நாளும் உன்னைப் பெத்து வளர்த்து......" என்று பெரிதாக இரைந்து அழ ஆரம்பித்து விட்டாள். இந்தச் சத்தத்தால் அண்டை வீடுகளிலுள்ள எங்கள் உறவு முறையார் எல்லாரும் வந்து கூடிவிட்டார்கள். அவமானத்தால் எனக்குக் கோபமும் ஆத்திரமும் வந்தது. எப்படியாவது என் தாயாரைச் சமாதானப் படுத்திவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் திமிர்ந்து, சற்று அதிகாரமாக, "இதோ பாரு, தங்கம்! இனி நீ என் அம்மாளுக்கு அடங்கி நடக்காவிட்டால் இந்த வீட்டில் இருக்க முடியாது. எழுந்து அம்மா காலிலே விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்ளு!" என்றேன்.



என் உறவுமுறையார் முன்னிலையில் கௌரவத்தை நிலை நாட்ட தைரியமாய் அப்படிச் சொல்லி விட்டேனே தவிர, தங்கத்தின் மனம் புண் படும்படி சொல்லி விட்டோமே என்று என் மனம் கிடந்து தவித்தது. கலியாணமான பிறகு அன்று நான் முதன் முதலாகவும், கடைசியாகவும் நான் தங்கத்தைக் கடிந்து வார்த்தை சொன்னது. தங்கம் என் மனமறிந்து தணிந்து போய்விடுவாள் என்றே நான் எண்ணினேன். ஆனால், தங்கம் நான் சற்றும் எதிர்பாராத விதமாக, "உங்க அம்மாளுக்கு அடங்கி நடக்க நான் ஒன்றும் தெருவிலே நாதியத்து நிக்கவில்லை; என்னைக் கௌரவமாய் வைத்துக் காப்பாத்த யோக்கியதை இல்லாதவங்க வந்து என்னைக் கலியாணம் செஞ்சுக்குவானேன்?" என்றாள். அவள் குரலில் கர்வம் நிரம்பியிருந்தது.

நான் திடுக்கிட்டுப் போனேன். அத்தனை பேர் முன்னிலையில் என்னை அவமானப் படுத்திய தங்கத்தின்மேல் வந்த கோபத்தை, நான் அவள்மேல் வைத்துள்ள அளவு கடந்த பிரியத்தால் ஒருவாறு அடக்கிக் கொண்டேன்.

"தங்கம்! உன்னை நான் கலியாணம் செஞ்சு கொண்டது தப்புத்தான். இனி மேல் சென்று போன விஷயத்தைக் குறித்து விசனப்பட்டுப் பயனில்லை. மலையிலே விளைஞ்சாலும் உரலிலே வந்து மசிஞ்சுதான் ஆகணும். எங்க அம்மாளுக்கு அடங்கி நடந்தாத்தான் உனக்கும் நல்லது; எனக்கும் நல்லது!" என்று மிகத் தணிவாகவும், நயமாகவும் சொன்னேன்.

என் தணிவைக் கண்டு என் தாயாரும், வந்திருந்தவர்களும் ஏளனமாய்ச் சிரித்தார்கள். நான் மிகப் பொறுமையாகத் தங்கத்தின் முகத்தைப் பார்த்தேன்.

"முடியாது! உங்களுக்கு அடங்கி நடக்க முடியாது! என்னை என் பிறந்த வீட்டுக்கு அனுப்பிவிடுங்கள். இனி உங்க முகத்திலேயே விழிக்க மாட்டேன்!" என்றாள் தங்கம் மிகத் துடுக்காக.



தங்கத்தின் அகம்பாவம் நிறைந்த அந்த பதில் என் தலையில் சுத்தியலால் பொட்டென்று அடித்த மாதிரி கணீரென்று கேட்டது. அடக்கி வைக்கப்பட்ட என் கோபமெல்லாம் பீறிக்கொண்டு வெளிப்பட்டது. அப்படியே தங்கத்தை அடித்து நொறுக்கி விடலாமா என்று இருந்தது. மேல் துண்டை எடுத்து இடுப்பிலே சுரித்து கட்டிக் கொண்டு, என் தாயாரின் கால்களில் விழுந்து எழுந்தேன்.

"அம்மா! நீங்க சொன்னபடி கேக்காமே இவளைக் கலியாணம் செய்து கொண்டதன் பலனை இன்று அனுபவித்து விட்டேன். இன்றைக்கே இவளைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பி விடுங்கள். நம் குல தெய்வத்தின் மேல் ஆணை இட்டுச் சொல்கிறேன்:—இனிப் பிறந்த வீட்டிலிருந்து இவளை நான் அழைத்து வந்தால், நான் உன் மகனாகப் பத்தனல்ல—இது சத்தியம்!" என்று ஆணையிட்டுச் சொல்லிவிட்டு, அங்கு நிற்கவே பிடிக்காமல் 'விர்'ரென்று வெளியே போய்விட்டேன்.

மறுதினமே தங்கத்தின் தகப்பனார் வந்து தங்கத்தை அழைத்துக் கொண்டு போய் விட்டார்.

"என்ன இருந்தாலும் உன் மருமகளுக்கு இவ்வளவு கர்வம் கூடாது ஆச்சி! நான் எவ்வளவு சொன்னேன். என் பேச்சைக் காதிலேயே வாங்க மாட்டேன்னுட்டதே! பாவம், புள்ளைத்தாச்சிப் பொண்ணு இப்படிப் புருசனைப் பத்திக்கூட நினைக்காமே இருக்கேன்னு என் மனது கிடந்து தவிக்குது! அதுக்கு இல்லையே அந்தத் தவிப்பு?" என்று என் தாயாரோடு அடுத்த வீட்டு ஆச்சி பேசிக்கொண்டிருந்தது என் காதிலும் விழுந்தது.

திடீரென்று என் கைச் சுத்தியல் நழுவிக் கீழே விழுந்தது. என் முன்னாலிருந்த ஒவ்வொரு சாமானும் 'பாவம், புள்ளைத்தாச்சிப் பெண்!' என்று சொல்வதுபோல் இருந்தது. ஆம், இங்கு இருக்கும் போதே 'மூன்று மாதம்' என்று வீட்டில் பேசிக் கொண்டது அப்பொழுது தான் என் நினைவுக்கு வந்தது. அந்த நேரமே நான் தங்கத்தின் மீது வைத்திருந்த கோபமெல்லாம் பறந்தது. 'பாவம், தங்கம் இப்பொழுது பிள்ளைத்தாச்சிப் பெண்!' என்று எண்ணியவனாய் ஒரு பெருமூச்சுடன் எழுந்து பட்டறையில் குறுக்கும் நெடுக்குமாக உலாவினேன். நகைப் பெட்டியைத் திறந்து அந்தத் திருகுப் பூவை எடுத்து வைத்துக் கொண்டு மீண்டும் மீண்டும் பார்த்தேன். பழைய நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்து என் மனதைக் கப்பிக் கொண்டன. பொறுக்க இயலாத வேதனையினால் என் மனம் வெதும்பித் தவித்தது.

அன்று இரவு வெகு நேரம் வரை அந்த மாதுளை மரத்தடியைவிட்டு நான் நகரவில்லை. ஆத்திரத்தில் நான் செய்துவிட்ட முட்டாள்தனமான சபதத்தை நினைத்து வெதும்பினேன். என், இந்தத் தங்கத்துக்குத்தான் என்ன அத்தனை கர்வம்? கொஞ்சமாவது என் நினைவு இருந்தால் இப்படி இருக்குமா? நான் ஏழை என்ற அலக்ஷியத்தில் என்னை அடியோடு மறந்து விட்டாளோ? இந்த எண்ணத்தை என்னால் நினைக்கவே முடியவில்லை. 'சே, சே, அவள் என்ன, அறியாத பெண்!'—இம்மாதிரிப் பலவிதமான எண்ணங்களால் என் மனது குழம்பித் தவித்தது.

எங்கள் குலத்துக்கே உரியதான சத்தியத்தை மீறி நானாகத் தங்கத்தைப் போய்ப் பார்க்கவும் முடியாது. மேலும், பார்ப்பதால் அவள் கர்வம் அதிகரிக்குமே யொழியக் குறையாது. ஆகையால் என் மனதை ஒருவாறு திடம் செய்து கொண்டு காலத்தை எப்படியோ போக்கி வரலானேன்.



காற்று வாக்கில்—மனிதர் பேச்சு வாக்கில், 'தங்கத்துக்குப் பிள்ளை பிறந்து, தாயும், பிள்ளையும் சௌக்கியம்' என்ற செய்தியும் வந்தது.

அந்த அருமைச் செல்வத்தைப் பற்றிய கற்பனையில் நாளெல்லாம் செலவிடுவேன். 'திடீரென்று ஒரு நாள் தங்கம், குழந்தையுடன் வந்துவிட மாட்டாளா?' என்ற ஆவலில் எங்கள் வீட்டு வாயிலை நோக்கிய வண்ணமே எப்பொழுதும் இருப்பேன்.

★

வருடங்கள் மெல்ல நகர்ந்தன. அந்த மாதுளை மரமும் நாலு தடவை இலை உதிர்த்துப் பூத்துக் காய்த்தும் விட்டது. ஆனால் என் வாழ்வில் மட்டும் மாறுதலேயில்லை! வர வர, 'தங்கத்தையும் குழந்தையையும் பார்க்கலாம்' என்ற நம்பிக்கையும் போய் என் மனதில் தீராத ஏக்கமே குடி கொண்டது. இந்த நாலு வருடத்தில் நான் நாளெல்லாம் உழைத்த உழைப்பால் கொஞ்சம் தொகையும் சேர்ந்து, எங்கள் ஓட்டு வீடும் மச்சு வீடாக மாறியிருந்தது.

வர வர எங்கள் விஷயம் பழசாகப் போய் விட்டதால் தங்கத்தைப் பற்றிய செய்தியே கிடைக்கவில்லை. 'அவள் தகப்பனார் இறந்து விட்டார்!' என்ற தகவலுக்குப் பின் எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை.

அன்று பட்டறையில் வேலை செய்து கொண்டிருந்த என் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள் என் தாயார்.

"ராசு, தங்கச்சி பட்டுவைக் கூட்டியாந்து ஒரு பத்து நாளாவது வச்சிருக்கலாம்னு பார்க்கிறேன்" என்றாள்.

நான் பதிலுக்கு, "அழைச்சிக்கிட்டு வாங்க அம்மா! நானும் தங்கச்சியைப் பார்த்து ரொம்ப நாளாச்சு! என்றேன்.

சீக்கிரமே என் தாயாரும் தகப்பனாரும் பட்டுவைக் கூட்டி வரப் புறப்பட்டார்கள்.

அன்றுதான் என் தங்கச்சி பட்டு வரும் தினம். வண்டி வரும் நேரம் நெருங்க நெருங்க எனக்குப் பட்டறையில் இருப்பே கொள்ளவில்லை. குழந்தைக்கு ஏதேனும் தின்பண்டம் வாங்கி வைக்க எண்ணி எழுந்து பட்டறையை மூடினேன். கொஞ்சம் பிஸ்கோத்தும், மிட்டாயும் வாங்கி வந்து வைத்துவிட்டுத் திரும்பினேன். அதே சமயம் வண்டி வந்து நின்ற ஓசையும், என் தாயாரின் பேச்சுக்குரலும் கேட்டது. சற்று நேரத்தில் குடுகுடு வென்று உள்ளே ஓடி வந்தான் பட்டுவின் பிள்ளை. ஆவலோடு அவனைத் தூக்கக் கை நீட்டியவன் ஆச்சரியத்தால் சற்றுத் தயங்கினேன். ஏனெனில், என் முன்னால் நின்றது தங்கச்சி பட்டுவல்ல; என் தங்கம்தான்!

"என்ன, அத்தாச்சி! உங்க மகனுக்கு என்னை அடையாளம் கண்டுக்கக்கூடத் தெரியலையே?" என்ற தங்கத்தின் குறும்புச் சிரிப்பு, நான் கனவு காணவில்லை என்பதை நிச்சயப்படுத்திற்று.

"இல்லை, இன்றைக்கு வரப்போவது நீ என்கிற விசயமே அவனுக்குத் தெரியாது; அதுதான் அப்படி அதிசயித்து நின்னு விட்டான்!" என்று பதில் சொல்லிக் கொண்டே, தங்கத்தின் முன்னெற்றியில் விழுந்த மயிரைக் கோதி விட்டாள் என் தாயார்!

தங்கத்தின் வருகையும், என் தாயாரின் அரவணைப்பும் என்னைத் திக்கு முக்காடச் செய்தன. என்ன பேசுவது, என்ன கேட்பது என்று அறியாதவனாய் ஸ்தம்பித்து நின்று விட்டேன்.

"ராசு! இன்று கூடவா இரவு நேரத்தில் பட்டறையில் வேலை செய்ய வேண்டும்? தங்கம் காத்துக்கிட்டு இருக்கு; பட்டறையை மூடிவிட்டுப் போ!" என்ற என் தாயாரின் அன்பான கட்டளை என் உடலைச் சிலிர்க்கச் செய்தது. அம்மாவின் இந்தக் கட்டளைக்காகவே காத்திருந்தவன்போல் எழுந்து பட்டறையை மூடிவிட்டுப் புறப்பட்டேன்.

கையில் தங்கத்துக்குக் கொடுப்பதற்கான பரிசு 'திருகுப் பூ'வுடன் மாதுளை மரத்தடியை நோக்கிச் செல்லும் என் மனதில் எப்படிப்பட்ட குதூகலம் நிரம்பி இருந்தது என்பதை எழுத்தினால் விவரித்துக் காட்டும் சக்தியைக் கடவுள் எனக்குக் கொடுக்கவில்லை. ஆனந்தமும் ஆவலும் பொங்க எங்கள் இன்ப வீடான அந்த மாதுளை மரத்தடியை அடைந்தேன்.

பால் போன்ற அந்த நிலவில் தங்கப் பதுமையைப்போல் அசைவற்று நின்ற தங்கம் என்னை ஏறிட்டுப் பார்த்தாள். அப்போது அவள் அழகான கண்களில் நீர் முட்டியது.

"தங்கம்!" என்றேன். உணர்ச்சி மிகுதியால் எனக்குப் பேசவே முடியவில்லை. கர்வமும், கன அழுத்தலுமாக நிற்கும்

அந்தத் தங்கமா இவள்? என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை.

"தங்கம்! இந்த அடக்கமும், பணிவும் எப்படிக் கற்றுக் கொண்டாய்? என் அம்மா ஒடைய மனதை எப்படி மயக்கிவிட்டாய்? அதை யெல்லாம், சொல்லு முதலில்!" என்றேன் ஆவலாக.

தங்கம் சொன்ன பதிலும் ஒரு கதை யாகத்தான் இருந்தது. அந்தக் கதையை யும் கொஞ்சம் கேட்டு விடுங்கள்:

"என் அப்பா இருந்தவரை எல்லாம் சரிவரத்தான் நடந்தது. அவருடைய காலத் துக்கு அப்புறம்தான், என் அண்ணன் மார்கள் அலட்சியமும் ஆரம்பமாயிற்று. வரவர 'அண்ணன்மார்கள் அன்பெல்லாம் அண்ணிமார்கள் பக்கம் சாய்ந்தது. வீட் டிலே நான் ஒருத்தி இருக்கிறேன் என்ற நினைப்பையே மறந்துட்டவங்க மாதிரி இருந்தது அவங்க பேச்சும், வார்த்தையும். இந்த நாளிலேதான் என் கர்வத்துக்குத் தலையிறக்கம் கண்டது. மெள்ள என் தவறும் என் மனதுக்குப் புலப்பட்டது.

"அன்றைக்கு ஏதோ என் பிள்ளைக்கும், அண்ணன் பிள்ளைக்கும் சண்டை வந்து இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் அடித்துக்கொண்டு அழுதானுங்க. இந்தக் குழந்தைப் புள்ளைகள் சண்டையைப் போய் அண்ணி பிரமாதமாக அண்ணனிடம் அளந்தது. உடனே அண்ணன் எழுந்து வந்து என் மகன் முதுகில், 'படார்' என்று ஒரு அறை கொடுத்துத் தள்ளியது! குழந்தை, 'அம்மா!' என்று அலறிக் கிட்டே ஓடி வந்தான். அப்படியே என் நெஞ்சை முறுக்கிப் பிழிகிறமாதிரி இருந் தது. இதுவரை என் பிள்ளையை நானே அடித்தவளல்ல. வலி பொறுக்காமல் துடித்த பிள்ளையை வாரி யெடுத்து அணைத்துக் கொண்டு விம்மினேன்.


"பாட்டியும், தாத்தாவும் இந்தத் தங்க மான பேரப் பிள்ளையைக் கண்டுட்டா விடு வாங்களா?" என்று எண்ணிப் பார்த்த போது, அன்று இரவு முழுதும் எனக்குத் தூக்கமே பிடிக்கவில்லை கடைசியாக, 'எப் படியாவது இந்தப் புள்ளையை மட்டுமாவது அவங்க காலடியிலே கொண்டு போய்ப் போட்டு விட்டு, என்னை மன்னிச்சு ஏத்துக் கிட்டாப் போச்சு; இல்லாட்டி ஆறு, குளம் இருக்கவே இருக்கு' என்று தீர் மானித்தேன். விடியச் சாமத்துக்குப் புறப் படும் வண்டியில் ஏறிவிடுவது என்ற துணி வுடன் எழுந்து, தூங்கிக் கொண்டிருந்த புள்ளையைத் தூக்கித் தோளிலே போட்டுக் கிட்டு, சத்தடி பண்ணாமல் புறப்பட்டேன்.

"மேற்கே இருந்து வரும் வண்டி வர நேரம் செல்லும் என்று தெரியலே, கிழக் கே இருந்து வந்த சின்ன வண்டியிலே யிருந்து இறங்கும் சனங்களை வேடிக்கை பார்த்துக்கிட்டே நின்னவள், கடைசி வண்டியிலே யிருந்து இறங்கும் என் மாமி யாரையும், மாமனாரையும் கண்டு, "அத் தாச்சி!" என்று கத்திவிட்டேன்.


"அது, 'ஸ்டேஷன்' என்பதைக்கூட மறந்து, ஓடிப் போய்த் தோளிலே கிடந்த புள்ளையைத் தூக்கி அவங்க காலடியிலே போட்டுப்புட்டு, 'கோ'வென்று கதறி விட்டேன்.

"சற்று நேரம் திகைத்து நின்றுவிட்டவங்க சற்று நிதானம் வந்ததும், அப்படியே பேரப் புள்ளையைத் தூக்கி எடுத்து அணைத்துக் கிட்டாங்க. அப்படியே என்னைக் கட்டிப் பிடித்து அணைத்துக்கொண்டு கண்ணீர் பெருக நின்னுங்க என் அத்தாச்சி!" என்று தன் கதையை முடித்தாள் தங்கம்.

நானும் அவள் பூ முடித்த கொண் டையிலே என் அன்புப் பரிசான அந்தத் திருகுப் பூவைத் திருகினேன். அந்தத் திருகுப் பூவுக்குப் போட்டியாகத் தன் பூ இதழ்களை எங்கள் தலைமேல் உதிர்த்துத் தன் சந்தோஷத்தையும் தெரியப் படுத்திக் கொண்டது எங்கள் அருமை மாதுளை மரம்.



"ஹைகோர்ட்டுக்குப் போனால் மீண்டும் வருவதற்குள்ளே போதும்போதும் னு ஆயிடும் என்கிறார்களே, அது சரியாத் தானுங்க இருக்கு; இந்த மாடிப் படி ஏறி இறங்கிறதுக்குள்ளே உயிரே போயிடும் போல இருக்கே!"


இப்பொழுது!
பிரஷின் ஒவ்வொரு
வருடலிலும் கூடுதல்
துலக்கும் வன்மை!
★ நீர் கடக்காது
நனைவுமேற்காது
★ பற்களைச் சுத்தப்படுத்தி
வெண்மை யாக்குவதில்
60% அதிக பயன் தரத்
தக்கது.
★ ஒரு வருட உத்தரவாத
முடையது.
இதோ மீண்டும்
Dr. West's
Miracle-Tuft
MEDIUM
மிருகங்களின்
மயிரே
கிடையாது
Dr. West's
TOOTH
PASTE
விநியோகஸ்தர்கள்:
பம்பாய் — கல்கத்தா — கராச்சி மதராஸ்
டாக்டர் வெஸ்ட்ஸ்
டூத் பிரஷுகளும் டூத் பேஸ்டும்

D W. 6283

காலக்ஷேபம்

வைத்திருந்த இடம்

நீதிபதி (ஜூரார்களைப் பார்த்து):—இவன் கைக் கடிகாரம் ஒன்றைத் திருடிவிட்டதாக வழக்கு. இவனோ இல்லை யென்று சாதிக்கிறான். இவனைச் சோதனை போட்ட அதிகாரி கோட்டுப் பைகளைப் பார்த்திருக்கிறார், ஷர்ட் பாக்கெட்டுகளைப் பார்த்திருக்கிறார், கையில் வைத்திருக்கும் பையில் பார்த்திருக்கிறார், எங்கேயும் கடிகாரத்தைக் காணவில்லை.

குற்றவாளி:—நான் அதை என் குல்லாவுக் கடியில் ஒளித்து வைத்திருந்தேன்!

நல்ல ரஸிகர்!

சங்கீத ரஸிகர் (பெருமையுடன்):—எனக்கு மிகவும் பிடித்த ராகம் காமவர்த்தினி தான் ஸார்! பாடகர் அதைப் பாடி விட்டாரானால் நான் கேட்டுவிட்டுப் போய் விடுவேன். அதற்காகத்தான் இரண்டு மணி நேரமாகக் காத்திருக்கிறேன்.

நண்பர் (மிகவும் அமைதியுடன்):—இப்பொழுது அரைமணி நேரமாகப் பாடகர் காமவர்த்தினி ராகத்தைத்தான் ஐயா ஆலாபனை செய்கிறார்!

ஆபத்துதான்!

கடன் கொடுத்தவர்:—என்ன ஐயா, நீர் பணத்தைக் கொடுக்கப் போகிறீரா, இல்லையா?

கடன் வாங்கியவர் (கோபத்துடன்):—சரிதான் ஐயா, ரொம்ப மிரட்டுகிறீரே! பணத்தைக் கொடுக்காவிட்டால் என்ன செய்வீர்?

கடன் கொடுத்தவர்:—என்ன செய்வேன் என்று கேட்கிறீர்? உம்முடைய கடன்காரர்களிடமெல்லாம் சென்று 'என் பாக்கி வந்து விட்டது' என்று சொல்லிவிடுவேன்!

தண்டனை போதுமா?

நீதிபதி:—உம்மை எங்கேயோ பார்த்ததாக ஞாபகம் இருக்கிறதே!

குற்றவாளி:—ஆமாம்; நீங்கள் நன்றாய் என்னைப் பார்த்திருக்கிறீர்கள். நான் தங்கள் பெண்ணுக்கு ஆர்மோனியம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தேன்.

நீதிபதி:—ஓகோ! அப்படியானால் உமக்கு ஆறு மாதத்துக்குப் பதிலாக இரண்டு வருஷம் கடுங்காவல் தண்டனை விதித்திருக்கிறேன்!

நல்ல யோசனை!

ஒருவர் (குடை ராட்டினத்தில் சுற்றுபவனைப் பார்த்து):—என் அப்பா, ரொம்ப நேரமாக ராட்டினத்தில் சுற்றுகிறாயே, உனக்கு மயக்கம் வரவில்லையா?

அவன்:—மயக்கம் வரத்தான் வருகிறது. என்ன செய்யலாம்? ராட்டினக்காரன் எனக்கு ஐந்து ரூபாய் தரவேண்டும். அதை வாங்குவதற்கு வேறு வழியில்லை. அதற்குத்தான் இப்படி ராட்டினம் சுற்றிச் சரிக்கட்டுகிறேன்!

சரிதான்!

வக்கீல் (பஸ் கண்டக்டரைப் பார்த்து):—அவசரமாக நான் கோர்ட்டுக்குப் போகணும்; கொஞ்சம் ஏற்றிக் கொள் அப்பா!

கண்டக்டர்:—உங்களை ஏற்றிக் கிட்டா நானும் கோர்ட்டிலே வந்து நிற்க வேண்டியதுதான்!

பேஷ்!

"இந்த மருந்தைக் கையில் தடவிக் கொண்டால் சட சடவென்று வேலை ஓடுகிறது!"

"அப்படியானால் உன் மண்டையிலும் கொஞ்சம் தடவிக் கொள்வதுதானே?"

கல்கி வாரப் பதிப்பு

உள் நாடு

வருஷச் சந்தா ...	ரூ.	13—0—0
6 மாதச் சந்தா ...	ரூ.	6—8—0
தனிப் பிரதி ...	அணா	0—4—0


வெளி நாடு

வருஷச் சந்தா ...	ரூ.	16—4—0
6 மாதச் சந்தா ...	ரூ.	8—2—0
தனிப் பிரதி ...	அணா	0—5—0

குறிப்பு:—சந்தா நேயர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறித்தே எழுதவும்.

மானேஜர்,

கல்கி காரியாலயம், சென்னை



பொம்மை ராஜா

ராஜி

★

ஒரு பொம்மைக் கடையில் பலவிதமான பொம்மைகள் இருந்தன. அந்தப் பொம்மைக் கடைக்குத் தினசரி எத்தனையோ பேர் வருவார்கள். அதனால் அங்கே விற்பனைக்கு வரும் பொம்மைகளெல்லாம் அநேகமாக மறுநாளே விற்று விடும். ஆனால், அந்தக் கடையிலும் மூன்று நான்கு பொம்மைகள் ரொம்ப நாட்களாக விற்காமலே இருந்தன. அதில் வெள்ளைக்காரிப் பொம்மையும் ஒன்று.

கடைக்காரன் இரவில் கடையை மூடி விட்டுப் போனவுடன் கடையிலிருக்கும் பொம்மைகளுக் கெல்லாம் ஒரே கொண்டாட்டம்தான்! எல்லாப் பொம்மைகளும் அதனதன் இடத்தை விட்டு வந்து விளையாட ஆரம்பித்து விடும். அவ்வாறு விளையாடும்போது, பொம்மைகளுக்குள் அடிக்கடி சண்டை வந்து விடும். வெள்ளைக்காரி பொம்மை அந்தச் சண்டையை வளரவிடாமல் தடுத்து வைக்கும். இதனால் எல்லாப் பொம்மைகளுக்கும் வெள்ளைக்காரி பொம்மையே தலைவியாயிருந்து வந்தது.

இப்படி இருக்கும்பொழுது, ஒரு நாள் கடைக்குப் புதியதாக மூன்று பொம்மைகள் வந்தன. அதில் ஒரு பொம்மை பார்ப்பதற்கு மிகவும் நன்றாக இருந்தது. பளபளவென்று ஒரு சிறிய கத்தியும் அதனிடம் இருந்தது. அந்தப் பொம்மையுடன், சாவி கொடுத்தால் சுற்றிச் சுற்றி வரும் ஒரு எலிப் பொம்மையும், அடிக்கடி சலாம் செய்யும் ஒரு சிப்பாய் பொம்மையும் வந்தன.

அன்றிரவு வழக்கம்போல் பொம்மைகள் விளையாட ஆரம்பித்தன. கையில் கத்தி வைத்திருந்த புதிய பொம்மை மட்டும் விளையாட்டில் கலந்து கொள்ளவில்லை. அதைப் பார்த்த மற்றப் பொம்மைகள் தங்களுக்குள் ஏதோ பேசிச் சிரித்துக் கொண்டன. உடனே அந்தப் புதிய பொம்மை உரத்த குரலில், "ஏ, பொம்மைகளே! நான் யார் தெரியுமா? நான்தான் உங்களுக்கெல்லாம் ராஜா. நீங்கள் யாவரும் எனக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும், தெரியுமா?" என்று தன்னிடமிருந்த பளபளப்பான கத்தியைக் காண்பித்தது.

உடனே சில பொம்மைகள் பயந்து ஓட ஆரம்பித்தன. மற்றும் சில பொம்மைகள், "உமக்கு ஏற்ற ராணி இங்கே வெகு நாட்களாக இருக்கிறாள். அவளை அழைத்து வருகிறோம்" என்று அரை கொடியில் வெள்ளைக்காரி பொம்மையை அழைத்து வந்தன.

வெள்ளைக்காரி பொம்மையைக் கண்டதும், ராஜா பொம்மைக்குக் கோபம் வந்துவிட்டது. "சீ! இந்தப் பொம்மையையா ராணி பொம்மை என்று சொல்லுகிறீர்கள்? என் அருகில் வருவதற்குக் கூட இந்தப் பொம்மைக்கு யோக்கியதை கிடையாது!" என்றது.



அவமானம் அடைந்த வெள்ளைக்காரி பொம்மை பேசாமல் திரும்பிச் சென்று விட்டது. அன்றைய தினத்திலிருந்து ராஜா பொம்மை எல்லாப் பொம்மைகளையும் தன்னிடம் மரி

யாதையாக நடந்து கொள்ள வேண்டுமென்றும், ஒரு பொம்மையாவது தனக்கு முதுகைக் காட்டக் கூடாது என்றும் உத்தர விட்டது.



மறு நாள் எலிப் பொம்மைக்கு ராஜா பொம்மை சாவி கொடுத்தது. அது உடனே ராஜா பொம்மையைச் சுற்றிச் சுற்றி வந்தது. அடுத்தபடி யாக சிப்பாய் பொம்மைக்குச் சாவி கொடுத்தது. அது அடிக்கடி ராஜா பொம்மைக்குச் சலாம் வைத்தபடியே இருந்தது. இதைப் பார்த்த மற்றப் பொம்மைகளும் பயந்து போய் ராஜா பொம்மைக்குக் கீழ்ப்படிந்து நடக்க ஆரம்பித்தன.

ராஜா பொம்மைக்கு முதுகைக் காட்டாமல் பின்பக்கமாக நடந்ததனால் பல பொம்மைகள் கீழே விழுந்து காயப்படுத்திக் கொண்டன. ராஜா பொம்மை கோபத்தினால் சில பொம்மைகளைக் கத்தியின் முனையால் குத்தவே, அவைகளின் சட்டைகள் கிழிந்து விட்டன.

ராஜா பொம்மை மற்றப் பொம்மை களைச் சரியாக நடத்தாததினால், எல் லாப் பொம்மைகளும் அதை வெறுத் தன. ஆகவே, மறு நாள் இரவு அவை வழக்கம்போல் ராஜா பொம் மைக்குத் தங்களுடைய வணக்கத்தைத் தெரியப்படுத்தவில்லை. இதற்குக் கார ணம் வெள்ளைக்காரி பொம்மைதான் என்று ராஜா பொம்மை நினைத்தது. ஆகவே, அது கோபம் கொண்டு கையில் கத்தியுடன் வெள்ளைக்காரி பொம்மையை நோக்கிச் சென்றது.

கடையில் ஒரே இருட்டாக இருந்ததினால், ராஜா பொம்மை கால் தவறி நிறைய ஜல மிருந்த ஒரு வாளி யில் தடால் என்று விழுந்து விட்டது. பாவம், ராஜா பொம்மைக்கு மூச் சுத் திணறிற்று. அதைப் பார்த்த வெள்ளைக்காரி பொம்மை ஓடோடி யும் சென்று ராஜா பொம்மையைத் தண் ணீரிலிருந்து மெது வாகத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டது. ராஜா பொம்மை அணிந் திருந்த ஆடைக ளெல்லாம் வீணாகப் போய் விடவே, வெள்ளைக்காரி பொம்மை எங் கிருந்தோ உடையை எடுத்து வந்து ராஜா பொம்மைக்கு உடுத்திற்று. தண்ணீரில் விழுந்த வேகத்தில் ராஜா பொம்மையிடமிருந்த கத்தியும் சுக்கல் சுக்கலாக உடைந்து விட்டது.

ராஜா பொம்மைக்கு அவமானம் தாங்கவில்லை. "விலையுயர்ந்த உடை களினால் அல்லவா நான் ராஜா பொம்மை என்று இறுமாப்பு அடைந் திருந்தேன்! அவை போனதோடு நில் லாமல், என் கத்தியும் போய் விட் டதே! இனி என்னை யார் மதிப் பார்கள்? கடைசியில் என்னால் அவ மானப்படுத்தப்பட்ட வெள்ளைக்காரி பொம்மையல்லவா என்னைக் காப் பாற்றிற்று? என்ன தான் அழகு இருந் தும் குணமில்லாமல் என்ன பிரயோஜ னம்?" என்று எண்ணி வருந்திற்று.

அடுத்த நிமிஷமே அது வெள்ளைக் காரி பொம்மைக்குத் தலை வணங்கி, "ஏ, வெள்ளைக்காரி பொம்மையே! நீதான் உண்மையான ராணி! நான் உனக்கு அடிமை!" என்றது.

அன்று முதல் எல்லாப் பொம்மை களும் மிகவும் சிநேகமாக இருந்தன. ராஜா பொம்மைக்கு நல்ல ஆடைகள்



இல்லாததனால் ஒருவரும் அதை வாங்க முன் வர வில்லை. அதனால் வெகு நாட்கள் வரை ராஜா ராணி பொம்மை யும் மிகவும் சந்தோஷமாக இருந்து வந்தன.


"லக்ஸ் டாய்லட் சோப்பால் தினமும் நான் அழகுபடுத்திக்கொள்ளும் முறை இதுவே" என்று புஷ்பவல்லி சொல்கிறார்
LUX TOILET SOAP
லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரையை தாராளமாக சருமத்தின் மேல் தடவுகிறேன்...
சுத்தமான, குளிர்ந்த ஜலத்தில் கழுவுகிறேன்...
பின்பு, உலர்ந்த மிருதுவான துண்டினால் முகத்தை துடைக்கிறேன்
ஸினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப்
உங்கள் சருமத்திற்கு ஏன் புது சோபையை அளிக்கக்கூடாது? புஷ்பவல்லியின் சுலபமான அழகுபடுத்திக்கொள்ளும் முறையை 30 நாட்கள் கையாளுங்கள்—லக்ஸ் டாய்லட் சோப்பின் சுத்தம்செய்யும் திறமையையும், குளுமையளிக்கும் குணத்தையும் கண்டு மகிழ்வீர்கள். இதன் மணமுள்ள சுறுசுறுப்பான நுரை உங்கள் சருமத்தை மிருதுவாகவும், பட்டுப்போல் மழமழப்பாகவும் செய்கிறது. இதுவே ஸினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப்—உங்கள் வதனத்தின் வனப்பையும் இச் சோப்பினால் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.
LTS. 139-23-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

கருப்பையாவின் கதை

பூ. பாலகிருஷ்ணன்

அடுத்த தடவை நான் பென்ஷன் வாங்கச் சென்றபோதும் ஆபீஸில் அதே கும்பல்தான். கும்பலின் நடுவே கருப்பையா உருளைக் கிழங்குபோல் உட்கார்ந்திருந்தான். சிரித்த முகத்துடன் பக்கத்திலிருந்த ஆசாமியிடம் ஏதோ அளந்து கொண்டிருந்தான்.

என்னைக் கண்டதும் அடையாளம் கண்டு கொண்டதற்கு அறிகுறியாக ஒரு முழுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே எழுந்தான். அவனது பேச்சை அதுவரை ரசித்து வந்த நண்பனை அப்படியே அந்தரத்தில் விட்டு விட்டு என்னருகில் வந்தான்!

“என்ன கருப்பையா, சௌக்கியந்தானா?” என்று விசாரித்துக் கொண்டே கொஞ்சம் தள்ளியிருந்த ஒரு மரத்தடியில் போய் உட்கார்ந்தேன்.

“சௌக்கியத்துக்கென்ன குறைவுங்க? இப்பத்தான் ஒங்களைக் காணோமேன்னு நெனைச்சேன்; நீங்களும் வந்திங்க!” என்று சொல்லிக் கொண்டே கருப்பையாவும் உட்கார்ந்தான்.

“நீ சொன்ன ‘காதலும் கல்யாணமும்’ என்ற கதையை நினைக்க நினைக்க எனக்கு ஆச்சரியமாயிருக்கிறதப்பா!” என்றேன்.

“அதுக்கே ஆச்சரியமாயிருந்ததுங்கிறீங்களே, இன்னொரு கதையைக் கேட்டா என்ன சொல்லுவீங்களோ?”

“அதைத்தான் சொல்லேன், கேட்கலாம்” என்றதும் அவன் ஆரம்பித்தான்:—

•

“எங்க முப்பாட்டனுக்கு முப்பாட்டனுக்கு முப்பாட்டன்மாரெல்லாம் பாண்டிய ராசா இருந்தாரில்லே, அவரோடே பட்டாளத்திலே சேர்ந்து சண்டை போட்டிருக்காங்களாம். இதைச் சொல்லிச் சொல்லி எங்க அப்பன் ரொம்ப ரொம்பப் பெருமை அடிச்சுக்குவான். ஒரு நாள், ‘அடே, வேலும் வாளும் பிடிச்ச அப்படியே எதிரிக்க தலையை வாங்கக்கா வேறமாதிரி வேவெண்டிய கை மப்பிட்டி பிடிக்கும்படியா ஆய்டிச்சேடா!’ன்னு நேரேயடியா அளக்க ஆரம்பிச்சட்டான்! அவன் பேச்சைக் கேக்கக் கேக்க எனக்கும் பேசணும்னு ஆசையாயிடிச்சி. ‘ஐயா, எனக்கு ஒரு யோசனை தோணுது’ன்னேன். ‘என்னடா மவனே?’ன்னான் அப்பன்.

“நான் சொன்னேன் :—‘என் ஐயா, கடைசி கடைசிலே ஏதோ ஒரு பாண்டியன் இந்த ராச்சியத்திலே ஆட்சி செலுத்தித் தானே இருப்பான்? அவனை யாரு ஒளிச்சது? அந்த ஆளு யாருன்னு கண்டு பிடிச்சு அவன் வம்சத்தையே பூண்டோடு அறுத்துட்டா ரொம்ப நல்லாருக்குமில்லே!’ என்றேன்.

“நான் என்னமோ ரொம்ப நல்ல யோசனை சொல்றதாக நெனைச்சிக்கிட்டுத் தான் சொன்னேன். ஆனால் அப்பன் மூளையில் அது ஏறல்லே! அவன் என்னை என்ன கேட்டாங்கிறீங்க? ‘அடே, எம் மகனுப் பொறந்து ஒனக்கு எண்டா இந்த மாதிரி யோசனையெல்லாம் தோணுது? ஒன் யோசனைலே ஏதாவது பிரயோசனமுண்டாடா?’ன்னான்.

“எனக்குக் கோவம் வந்திடிச்சு. அப்படியே கிளிந்துட்டேன். ‘என்ன ஐயா, ரொம்பப் பேசறியே! நீ இந்நேரம் தொண தொணத்தயே, அதிலே மட்டும் என்ன பிரயோசனம்?’ன்னு தைரியமாக் கேட்டேன்.

“கேட்டேனோ இல்லையோ, அப்பன் அப்படியே புலி பாயற மாதிரி கை ரெண்டையும் தூக்கிக்கிட்டு எம்மேலே பாஞ்சான். நான் கம்மத்தா விலகிக்கிட்டேன். அப்பன் அப்படியே தரையிலே மோதிட்டான்! அப்பறம் அங்கே நின்னு அபத்துடான்னு, விட்டேன் பாருங்க சவாரி! ஒரே ஓட்டம்! அப்பன் விடுவானா? அவனும் என்னைத் தொரத்திக்கிட்டே தெரு முடிய ஓடியாந்தான். நாஞ் சிட்டாப் பறந்தேன்! கடைசிலே அப்பன் நின்னுட்டான். நான் நிக்கல்லே. ஓடி ஓடி ஊருக்கு வெளியே, முனிமுனிச்சான் கோயில்லே வந்துதான் நின்னேன்.

“கொஞ்ச நேரம் அங்கேயே குந்திக்கிட்டு யோசனை பண்ணினேன். வீட்டுப் பக்கம் போனா அப்பன் காலைத் தரிச்சப் புடுவான்! கையிலேயோ காத்துட்டுக்கூடக்

கிடையாது. என்னடா செய்யறதுன்னு ரொம்ப நேரம் யோசனை பண்ணினேன்.

"கடைசிலே இந்த ஊருக்குத்தான் வந்தேன். நம்ம ஊர்லேருந்து இது ஒரு கல் தானுங்களே! இந்த ஊர் பெரிய தாலுகா வாச்சே, எப்படியாவது இங்கே பொளச்சிக்கிடலாங்கிற நம்பிக்கையிலேதான் இங்கே வந்தேன்.

"யாரைப் போய் ஒத்தாசை கேக்கறதுன்னு முளிச்சிக்கிட்டே கடைத் தெருவோடு போய்க்கிட்டிருந்தேன். அப்பத்தான் பாருங்க, ஒரு கடையிலே இந்தத் தடியன் ஒக்காந்து வெத்திலே மென்னுக்கிட்டிருந்தான்......"

"எந்தத் தடியன்?"

"அவன்தான் இந்தக் 'கூபிரட்டிவ்ஸ்டோர்' (கோவாபரேடிவ் ஸ்டோர்) தடியன்! அவன் பேரைச் சொல்லிக்கிட வேண்டாம். என்னத்த நாஞ் சொல்றது? அவங்கிட்டே போய், 'ஒன்னாலே எதாச்சியும் எனக்கு ஒத்தாசை பண்ண முடியுமா?'ன்னு கேட்டேன். 'என்ன, ஒத்தாசை?' என்றான் அவன். 'ஒரு மம்மிட்டியோ கோடாலியோ வாங்கிக் குடுத்தடு. உன் புண்ணியமாப் போகட்டும். அதை வச்சு ஏதோ வேல செஞ்சு பொளச்சிக்கிறேன். நல்ல கூலி கெடச்சா அந்தக் கொயத்தையும் ஒனக்குத் திருப்பிக் குடுத்துடறேன்'ன்னேன். 'நீ நம்ம சாதியான். நம்ம ஊரான். எல்லாம் சரிதான். ஆனா இந்தக் கோடாலிப் பேச்சு மட்டும் வேணவே வேணாம்'ன்னான் அவன்!

"பாத்துக்கிடுங்க. நம்ம பொறப்பெல்லாம் பத்தி ஒசத்தியா என்னென்னமோ பேசினான். ஆனா கையைக் கடிக்கிறதுங்கவும் 'ஙுங்கே பிகேனு'ன்னு ஆரம்பிச்சுட்டான். இந்த உலகமே இப்படித்தானுங்க!

"நான் வுட்டேனா? அவனைப் பார்த்து ஒரு முளி முளிச்சேன் பாருங்க, அவன் பயந்துட்டான்! 'என்னடாது, கோடாலி இல்லாமலேயே நம்மை இவன் வகுந்து போட்டுடுவான் போலிருக்கே'ன்னு தோணிடுச்சி அவனுக்கு. உடனே பாருங்க, சிரிச்சிக்கிட்டே பேச்சை மாத்தினான். 'நாஞ் சொல்றேன்னு வித்தியாசமா நெனைச்சிக்கிடாதே, கருப்பையா! அந்தத் தொளிலெல்லாம் நமக்குச் சரிப்பில்லே. நான் வேணும்னு உனக்கு ஒரு வேல தரேன்'ன்னான். 'என்ன வேல?'ன்னு கேட்டேன். 'ஒண்ணுமில்லே, என் கடையிலேயே நீ வேல செய். சாமாங் கட்டிக் குடுக்கிறது, கடையைப் பெருக்கிச் சுத்தமா வைக்கிறது எல்லாம். அத்தோட என் ஆட்டேலயும் கொஞ்சம் முடிஞ்ச வேலையைச் செய். நான் உனக்குச் சோறு போட்டு மாசம் ஒரு ரூவா தரேன்!'னான்.



"எப்படியிருக்குது பாருங்க! மம்மிட்டி — கோடாலி பிடிக்கிறது நம்ம சாதிக்குச் சரியில்லே. ஆனா கடையிலே தூத்துத் தெளிக்கிற வேல நமக்குச் சரி!

"ஆனா அவங்கிட்ட அப்பொ ஒண்ணும் நாஞ் சொல்லிக்கிடலே. 'சரி, இந்த வேல எனக்குச் சம்மதம்'ன்னுட்டேன்.

★

"கடையிலே கணக்கெழுத ஒரு ஐயன், சாமான் கட்டிக் குடுக்க நானு—ரெண்டே பேர்தான். மொத மொதல்லே அந்தத் தடியன் சொந்தக் கடையாக்கும்னு நெனைச்சிக்கிட்டிருந்தேன். கொஞ்சம் நாள் போகவும்தான் ஐயன் எங்கிட்ட எல்லாம் சொன்னான். 'அடே, இது இவன் அப்பன் வூட்டு முதல் இல்லேடா, ஊரான் மொதலெ வச்சி இவன் 'கூபிரட்டி ஸ்டோர்'னு ஊரைப் புசனி பண்ணிக்கிட்டுத் திரியறான்! ஊரான் மொதல்லே இவன் கொள்ளையடிக்கலாம், நம்ம கொள்ளையடிக்கக் கூடாதா?'ன்னான். நான் 'சரி'ன்னுக்கிட்டேன்.

"தடியன் இல்லாதபோது வித்து மொதலாகும்லே, அதிலே பாதிக்கி ஐயன் கணக்கு எழுத மாட்டான்! ஒரு நாளுக்கு ஒரு ரூவாயாவது 'கன்னான்' அடிப்பான்! எனக்கு ரெதம் எட்டணாபோல கெடைக்கும். நான் பாட்லே அதை சொக்கா காப்பி



குடிக்கவும், இட்டிலி திங்கவுமா குசாலா செலவளிப்பேன்.

"இப்படியே தமாசா இருந்தோம். ஒரு நாள் தடியன் இல்லாதப்போ ஒரு ஆள் வந்து ரெண்டு ரூவாக்கி அரிசி கேட்டாரு. நான் அளந்து போட்டேன். ஐயன் ரூவாயே வாங்கிக்கிட்டான். ஆனா சீது குடுக்கல்லே. வாங்க வந்த ஆளு அதெல்லாம் கேட்டுக்கிடல்லே. அவர் பாட்லே போயிட்டாரு.

"ஐயன் அந்த ரெண்டு ரூவாயையும் 'பர்ஸ்'லே போட்டான் பாருங்க, தடியன் உள்ளே வந்துட்டான்! அவனைப் பார்த்ததும், ஐயன் 'பக்கு பக்கு'ன்னு முளிச்சான். என்ன பண்ணுவான், பாவம்! தடியன் அவனைக் கண்டபடி வெஞ்சு அந்த மாசச் சம்பளம் கூடக் கொடுக்காமல் ஐயனைத் தொரத்திட்டான். ஐயன் பெட்டுக் கிளிஞ்சுது! என்னைத் தடியன் ஒண்ணுமே கேட்டுக்கிடலே. 'தலை பொளச்சது தம்பிரான் புண்ணியம்டா!'ன்னு நானும் சந்தோசமாயிருந்தேன்.

"ஐயன் போகவும் அவனுக்குப் பதிலா இன்னொரு கணக்குப் பிள்ளை வந்தான். ஆனா நான் அவங்கிட்ட காசு சம்பாதிக்கிற வழியெல்லாம் சொல்லிக்கிடலே! அவனும் இல்லாமே, தடியனும் இல்லாமே இருக்கிறப்போ ஏதாவது வித்து மொதலாளு அதை வேட்டியிலே முடிஞ்சிக்கிடுவேன்!

"ஒரு நாள் பாருங்க, சாயங்காலம் நாலு மணி யிருக்கும். தடியன் கடையிலே இல்லே. கணக்குப் புள்ளே, 'இதோ, காப்பி சாப்புட்டுட்டு வாரேன்'னு வெளியிலே போயிட்டான். நான் மட்டும்தான் கடையிலே இருந்தேன். அப்போ ஒரு கிளவி வந்து காலணாவுக்குப் பனை வெல்லம் கேட்டா. நான் அவளுக்குப் பனை வெல்லம் கட்டிக் குடுத்துட்டு அந்த காலணாவை வேட்டிலே முடிஞ்சுக்கிட்டிருக்கேன், தடியன் எங்கிருந்தோ வந்துட்டான்! 'அடே களவாட வேறே ஆரம்பிச்சுட்டியா, நீ? கிளவி குடுத்த துட்டைக் காசுப் பொட்டி மேலே வைக்காமே வேட்டியிலே என்டா முடிஞ்சே?'ன்னுக்கிட்டே என் வேட்டியை உருவிட்டான்.

"எனக்குக் கோவம் வந்திடிச்சி. 'அடே, என்னை என்னன்னு நெனைச்சே? நீ ஊரான் சொத்தைக் கொள்ளை யடிக்கலாம், நான் அடிக்கக் கூடாதா? தினம் என்னும் புண்ணாக்கும், வெல்லமும், எண்ணெயுமா இங்கேருந்து ஒன் வூட்டுக்கு ஒளிலே அடிச்சிக்கிட்டுப் போறியே!' — அப்பிடி, இப்பிடின்னு கத்தினேன்!

"அவனுக்குப் பயமாப் போச்சு, 'என்ன கருப்பையா, நம்மெல்லாம் ஒரே சாதியில்லே? நமக்குள்ளேயே இப்படி சண்டை போட்டுக்கிட்டா நல்லா இருக்குமா? இன்னமே நீயும் திருட்டை விட்டுவிடு. நானும் இப்பொ உன் சீட்டைக் கிளிக்காமல் வேலையிலே வெச்சிக்கிடறேன்'னு சமாதானமாய்ப் பேசறவன் மாதிரி பாசாங்கு பண்ணினான். அவன் சாதிப் பேச்சை எடுக்கவும், 'அது சரிதான் அண்ணே!'ன்னு நானும் சமாதானமாப் போயிட்டேன்!

"அன்னிக்கிக் கடை மூடறவரையிலேயும் தடியன் குந்திக்கிட்டே இருந்தான். கடையை மூடிட்டு வூட்டுக்குப் போறப்பவும் எங்கூடவே வந்தான். ஆனா ஒண்ணும் பேசிக்கிடலே. நானும் ஒண்ணும் பேசிக்கிடலே!

"மறுநாள் காலையிலேயும் எங்கூடவே அவனும் கடைக்கு வந்தான். பத்து மணி

அடிக்கவும், 'கருப்பையா, நான் மறந்தே போயிட்டேன்; காந்தி ஒன்னைப் பத்து மணிக்கு வரச் சொன்னாடா!'ன்னான். 'எந்தக் காந்திங்க?'ன்னு கேட்டேன். 'அவ தாண்டா எம் மவ!' இன்னான் அவன். 'எதுக்கு வரச் சொன்னா?'ன்னேன். 'எதுக்கோ தெரியாது. நீ ஒடனே போ!'ன்னான்.

"அவன் சொன்னதைக் கேக்கவும் எனக்குச் சந்தோசம் தாங்கல்லே. 'ஒரு வேளை நம்மைக் கட்டிக்கிட ஆசையா யிருக்காளோ'ன்னு நெனைச்சிக்கிட்டு ஊட்டுக்கு ஓடியே வந்தேன். திண்ணையிலே தடியன் மவ காந்தி நின்னுக்கிட்டிருந்தா. 'என்னை வரச்சொன்னியாமே!'ன்னு கேட்டேன். 'ஆமாங்க அத்தான்!'ன்னா அவ!

"எனக்கு என்னமோ சேஞ்சது பாருங்க, தலை சுத்த ஆரம்பிச்சிடிச்சி! 'நம்ம மேலே இவ ஆசை வெச்சிருக்கிற சமாசாரம் இத்தனை நாளாத் தெரியாமப் போச்சே!'ன்னு நெனைச்சிக்கிட்டேன். 'அத்தான், இங்கே பாரு!'ன்னு அவ. நான் அவளையே பாத்துக்கிட்டிருந்தேன். 'என்ன அத்தான், நான் தெருவிலே போகும் போதெல்லாம் எல்லாரும் என்னையே உத்துக்கிட்டுப் பாக்கிறாங்களே, அது ஏன்?'னு கேட்டா. 'நீ அளகா யிருக்கே, அதுதான் பாக்கிறாங்க!'ன்னேன். 'நெசமாவா நான் அளகா இருக்கேன், அத்தான்?'னு கேட்டா. 'ஆமாண்டி என் தங்கம்! இதுலே என்ன சந்தேகம்?'னுக்கிட்டே அவ கன்னத்துலே ஒரு தட்டு லேசாத் தட்டினேன்.

"அவ்வளவுதான்! 'மட்டு, மட்டு'ன்னு எம் முதுகிலே அடி விழ ஆரம்பிச்சிடிச்சி!

"அவ அப்பன் தடியன் இருக்கானே, அவன்தான் பின்னாலேருந்து வந்து அப்படி 'மட்டு, மட்டு'ன்னு என்னை அடிக்க ஆரம்பிச்சுட்டான்!

அவன் கடையிலே வாசல் வரையிலேயும் என்னைத் தள்ளிக்கிட்டே வந்தான். நடு நடுவிலே அடி வேறே! ஊட்டு வாசப்படி வரவும் ரோட்டிலே எல்லாருக்கும் கேக்கும் படியா ஒரு சத்தம் போட்டான் பாருங்க, "அடே, ஒம் மேலே இரக்கம் வெச்சு ஒனக்கு வேலை குடுத்து சோறும் போட்டாக் கொஞ்சமாவது நன்றி யில்லாமே எம் மவ மேலேயே கை வைக்கப் பாக்கிறியா, நீ?'ன்னுக்கிட்டே ஒரு கல்தா குடுத்தான், பாருங்க. நடுரோட்டிலே வந்து வுளுந்தேன்!

"ஒடனேயே நான் ஒரே ஓட்டமா ஓடினேன். எங்க ஊர்ப் பக்கம் வந்துதான் நின்னேன், பாருங்க!" என்றான் கருப்பையா.


"அவன் மகள் சமாசாரம் என்ன ஆயிற்று?" என்று கேட்டேன்.

"அதுக்கு எம்மேலே ஆசையும் இல்லே, ஒண்ணுமில்லேங்க! திருடினதுக்காக என் சீட்டைக் கிளிச்சா கடைத் தெரு பூரா இவன் 'டபிராட்டி ஷ்டோரை'க் கொள்ளை யடிக்கிறான்!'னு நான் சொல்லி அவன் மானம் போயிடுமில்லே? அதுக்காகத்தான் அவன் மவளை அப்படி ஒரு நாடகம் ஆடச் சொல்லி இருக்கான்," என்றான் கருப்பையா.

"அப்புறம் உன் தகப்பனுக்கும் உனக்கும் ராஜியாய் விட்டதா?" என்று கேட்டேன்.

"ராசியாகாம என்னங்க? வெட்டுப் பளியா, குத்துப் பளியா? நான் வரவும் அப்பன் என்னைக் கட்டிக்கிட்டு, 'வாடா எம் மவனே, ஏண்டா இப்படி ஓடிப் போயிட்டே?'ன்னு அழுதான். 'அது தான் நான் திரும்பி வந்துட்டேனில்லே? ஏன் இப்போ அளுறே வீணா?'ன்னேன். அப்புறம் எல்லாம் சரியாயிடிச்சி!" என்று சொல்லிச் சிரித்தான் கருப்பையா.

உபயோக விபரீதம்!



"மாமா! எங்காத்திலே கொஞ்சம் பேப்பர் வாங்கிக்கொண்டு வரச் சொன்னா!"

"என்னடாது! இருந்தாப்போலிருந்து உங்காத்திலேயும் பேப்பர் படிக்க ஆரம்பிச்சுட்டா?"

"படிக்கிறதுக்கில்லே, மாமா! கொஞ்சம் மாவு அரைக்கணுமாம். யந்திரத்துக்கு அடியில் போடறதுக்காகக் கேட்டா!"



ஓர் அழகிய இளநங்கை...

அமலா! கல்கத்தாவில் இளைஞரான ஒரு பாங்க் காஷியரின் மனைவி அவள். ஆயிரக்கணக்கான நம் மெல்லியர்களைப் போன்று அவளும் தனது வதன எழிலைப் பாதுகாக்க **புதிய** முறையாகிய பாண்ட்ஸைக் கையாண்டு வருகிறாள்..

அமலாவின் கோமள வதனத்தைக் காண
அவள் சிநேகிதைகளுக்குப் பொறாமை!

. . . காலை வேளைகளில் அமலா சிநேகிதிகளுடன் கூடிக் குலாவுகையில், அவர்கள் அவளுடைய இள வதனத்தைக் கண்டு வியக்கிறார்கள். அவள் கூறுவதாவது: "வெய்யிலும் தூசும் சருமத்தின் இயற்கைத் தைலங்களை வற்றியுலரச் செய்கிறது. அவற்றை சருமத்திற்குத் திருப்பியளிக்க வேண்டும். **நான் பாண்ட்ஸ் உபயோகிக்கிறேன்**". தினம் காலை, மாலைகளில் அவள் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம் முகத்திற் பூசி, சொற்ப நேரம் கழித்து அதை மெதுவாகத் துடைத்துக் களைகிறாள். தூசும், அழுக்குமெல்லாம் அத்துடனேயே வந்து விடுகிறது. **பின்பு** பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தடவுகிறாள். அது சருமத்தினுட் சென்று, உலர்ந்துபோன இயற்கைத் தைலங்களை சருமத்திற்குத் திருப்பியளிக்கிறது. வதனம் பூவிதழ்போன்று மிருதுவுமாகிறது.

"அமலா! நாளுக்குநாள் உன் வதனம் அதிக எழில் வாய்க்கிறது!"





பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம் — தினம் காலை, மாலைகளில் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமால் முகத்தைச் சுத்தம் செய்யுங்கள் — ஸோப்பு வேண்டாம். ஒன்றிரண்டு வாரத்தில் முகசருமம் சேர்த்தி மிக வாய்க்கும்.



பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் — கோல்ட் க்ரீமைத் துடைத்துக் களைந்ததும், பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தாராளமாகப் பூசிக்கொள்ளுங்கள். அது உலர்ந்துபோன இயற்கைத் தைலங்களை சருமத்திற்கே திருப்பி யளித்து, வதனத்தை மிருதுவும், பளபளப்புமாக்கிறது. அது கண்ணுக்குப் புலப்படவும் செய்யாது.



பாண்ட்ஸ் பவுடர் — பின்பு வேண்டுமானால், பாண்ட்ஸ் பவுடர் பூசிக்கொள்ளுங்கள் — உங்கள் முகசாயலுக்கேற்ற வர்ணமாகத் தேர்ந்தெடுத்து. அது முகத்திற்கு ரோஜா விதழ் போன்றதோர் மோகன காந்தி பளிக்க உதவும்.

பாண்ட்ஸ் க்ரீம்ஸ்

☆

வியாபார விவரங்களுக்கு இவ்விலாசத்திற்கெழுதவும்: எஸ். டி. ஸெய்மூர் & கோ., (இந்தியா) லிமிடெட், பம்பாய் – கல்கத்தா – கராச்சி – சென்னை

JWT

வெற்றி யாருக்கு?

லல்லு

குடும்பத்திலே எவ்வளவோ பிரச்னைகள் ழும். தான் யாருக்கும் விட்டுக் கொடுப்பவனல்ல என்ற தோரணையில் புருஷன் வெகு கண்டிப்பாகவும் கடுமையாகவும் தான் நடந்து கொள்ளுகிறான். ஆனால் முடிவில் வெற்றி அவனுக்கு என்கிறீர்களா? அது தான் இல்லை; கடைசியில் புருஷன் தோல்வியை ஒப்புக்கொண்டு விடுகிறான்!

* * *

அன்று வரதராஜன் ஆபீஸிலிருந்து கிளம்பியதும் வழக்கம்போல் நாலே எட்டில் போய் நகர்ந்து கொண்டிருந்த டிராம் வண்டியில் தொத்திக் கொண்டான். தினம் தினம் பார்த்துச் சலித்துப் போன காட்சிகளை அவனுடைய கண்கள் வெறிச் சென்று பார்க்க, மனது தீவிரமாக எண்ணமிடலாயிற்று: "ஓடுகிற டிராமில் ஏறவேண்டாம் என்று அம்மா எவ்வளவு முறை எச்சரித்து அனுப்புகிறாள்! ஆனாலும் இந்தச் சனியன் பிடித்த பழக்கம் விடமாட்டேன் என்கிறதே!—அது கிடக்கட்டும். காலையிலே சௌந்தரம் என்னவோ வாங்கிக் கொண்டு வரச் சொல்லி நினைவு மூட்டினாளே, என்ன அது?—அட சட்! பர்சைக் கலர் எம்பிராய்டரி நூல்லு! மூன்று நாளாக அவளை ஏமாற்றியாச்சு! இன்று நிச்சயம் கோபித்துக் கொள்ளுவாள்!" என்று தன்னை நொந்து கொண்டான்.

சென்ட்ரல் ஸ்டேஷன் வந்ததும் உட்காரக் கொஞ்சம் இடம் கிடைத்தது. 'ஸ்டெதாஸ்கோப்' சகிதம் மெடிகல் காலேஜ் மாணவி யொருத்தி எதிரே வந்து நின்றாள். ஒரு நிமிஷம் அவளைக் கவனியாதது போல் இருந்துவிட்டு வேறு யாராவது இடம் விடுவார்களா வென்று பார்த்தான் வரதராஜன். யாரும் அசையாமற் போகவே, தன் இடத்தை அவளுக்குக் கொடுத்துவிட்டு, மீண்டும் வளையத்தைப் பிடித்துக்கொண்டு தவம் செய்யலானான். வண்டி மயிலாப்பூர் தண்ணீர்த் துறைக்கு வந்ததும், வரதராஜன் இறங்கி வீட்டை நோக்கி நடந்தான்.

வாசலில் நின்ற வண்ணம் சௌந்தரம் பக்கத்து வீட்டுப் பெண்ணுடன் பேசிக் கொண்டிருந்தாள். தெருக்கோடியில் வரும் போதே வரதராஜன் 'கோட்'டைக் கழற்ற ஆரம்பித்து விடுவான். இதிலிருந்தே அவனை அடையாளங் கண்டு கொள்ளும் சௌந்தரம், பேச்சை நிறுத்திவிட்டு நேரே காப்பி போடுவதற்காக வெந்நீர் அறையை நோக்கிச் சென்றாள். அவளுடைய மாமியார் வெகு ஆசாரம். சமையலறை அடுப்பில் காப்பி போடக்கூடாது!

காப்பியைக் கொண்டுவந்து விசுப்பலகையின்மேல் வைத்துவிட்டு, சங்கிலியைப் பிடித்துக் கொண்டு ஒய்யாரமாகச் சிரித்து நின்றாள். சௌந்தரம் இயற்கையிலேயே நல்ல அழகி. ஆசாரமாக மடிசார் வைத்துக் கட்டின புடவை; தலையிலே நேர் வகிடு; பவுடர் ஒத்திக்கொள்வது, சோப்புத் தேய்த்துக் கொள்வது போன்ற பழக்கங்கள் ஒன்றும் அவளிடத்தில் கிடையாது. மாமியாரைத் திருப்தி செய்யத் தெரிந்த பெண் இப்படியல்லவா இருக்க வேண்டும்!

வரதராஜன் காப்பியை வெகு சாவதானமாக ஆற்றிக் கொண்டிருந்தான். அதைக் குடித்து முடியும் வரை அவன் எம்பிராய்டரி நூலைப் பற்றிய பேச்சை எடுக்கமாட்டான் என்பது அவன் அபிப்பிராயம்!

காப்பியைக் குடித்தானதும், "சௌந்தரம், அம்மா எங்கே போயிருக்கா?" என்று கேட்டான்.

"எனக்கென்ன தெரியும்? அந்த நரசிம்மய்யங்காராத்துக்குப் போயிருப்பார்னு தோன்றுகிறது!" என்றாள் சௌந்தரம்.

"அங்கே என்ன விசேஷமாம்?"

"போங்கோ, ஒன்றும் தெரியாதது போலப் பாசாங்கு செய்கிறீர்களே!" என்றாள் சௌந்தரம். அப்போது அவளுடைய முகம் சிவந்துவிட்டது.

வரதராஜன் அதைக் கவனிக்காதவன் போல், "அந்தச் சிவா ராணியுடன் பேசிக் கொண்டிருந்தாயே, அவா காலேஜிலே 'லேடஸ்டு பேஷன்' என்னவென்று விசாரித்துக் கொண்டாயா? இப்பொழுது எல்லாரும் இடது மூக்கிலே நத்து போட்டுக்க ஆரம்பிச்சிருக்காளோ, இல்லையோ?"

"உங்களுக்கு இந்தப் பரிகாசமும் கேலியும்தான் எப்போதும்!"

"என்னடி அப்படிச் சொல்றே? காதில் ஜிமிக்கியாச்சு; கரை வைத்த ரவிக்கையாச்சு; பின்னலுக்குத் தங்கம் கட்டியக் குஞ்சலமாச்சு! இப்படி பாட்டிகாளைய 'பேஷ'னெல்லாம் திரும்பறதேன்னுதான் கேட்டேன். அவனண்டே என்னதான் பேசிக்கொண்டிருந்தாய், சொல்லேன்?"

"கேலி பண்ண மாட்டேளே?"

"இல்லே; சொல்லு!"

"அவன் புதுசா ஒரு 'நெக்லஸ்' பண்ணியிருக்கா. அதைப் பற்றித்தான் விசாரித்துக் கொண்டிருந்தேன். அது......?"

"ஓஹோ!"

"பார்த்தேளா? உங்களுக்கு எப்பவும் பரிகாசந்தான்!"

"இல்லே, இல்லே; சொல்லு!" என்று மீண்டும் அவளை வற்புறுத்தினான் வாதராஜன்.

ஏனெனில், எம்பிராய்டரி நூலைப் பற்றிய நினைவு அவளுக்கு வந்துவிடுமோ என்று உள்ளூறப் பயம் அவனுக்கு! அதற்காகவே அவன் அந்த 'நெக்லஸ்' விஷயத்தை இன்னும் கொஞ்சம் நீட்டிப் பேச ஆரம்பித்தான்!

"காலே பவுன்தானும், கூலிதான் இருபது ரூபாயாம். தங்கத்தைக் கொடுத்தால் கம்பெனியிலே பண்ணித் தருகிறானும். என் காப்பிக்கொட்டைச் செயின் அறுந்து போயிடுத்தே, அதை அழிச்சுட்டு......"

"அப்படிச் சொல்லு! சோழியன் குடுமி சும்மா ஆடுமா? அதுதான் காப்பி இன்றைக்கு 'ஏ ஒன்!' போல இருக்கு!"

"முழுக்கக் கேளுங்கோளேன்! போன மாசம் என் அண்ணா வந்தபோது கொடுத்த பத்து ரூபா இருக்கிறது; நீங்கள் பாக்கி பத்து ரூபாயைக் கொடுத்தீர்களானால் அந்த மாங்காய் மாலையை......"

"என்ன, என்ன! மாங்காய் மாலையா? அதுதான் மாங்காய் தேங்காய்ன்னு பேச்சு நடந்ததோ? அடேயப்பா! இந்தப் பொம்மனாட்டிகள் ஐந்து நிமிஷம் வாயசைச்சா ஐம்பது ரூபாய்க்கு வழி வைத்து விடுவார்கள்! மாங்காய் மாலையும் வேண்டாம், சுண்டைக்காய் மாலையும் வேண்டாம்! பேரைப் பார்த்தாலே சுத்த கர்நாடகமாயிருக்கு. அந்த லேடி டாக்டர் சொன்ன மருந்தை 'ரெகுல'ரா சாப்பிட்டுக்கொண்டு வந்து உடம்பு ஒண்ணுமில்லாமல் நன்னாயிருந்தாப் போதும்!" என்று பட பட வென்று பொரிந்துவிட்டு, வாதராஜன் தன் அறைக்குப் போய்ப் பத்திரிகையை எடுத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தான்.

சௌந்தரத்துக்கு மிகவும் இளகிய மனசு. யாரையும் 'சுருக்'கென்று ஒரு வார்த்தை சொல்ல மாட்டாள்; பிறரும் தன்னைச் சொல்லப் பொறுக்க மாட்டாள். ஆகவே, யாருடைய பிரியத்தை அவள் மிகவும் கோருகிறாளோ, அவர் சிடுசிடு வென்று நாலு வார்த்தை சொன்னால் பொறுப்பாளா? கண்களில் ஜலம் ததும்ப, கூடத்து மூலையில் போய் உட்கார்ந்து விட்டாள்.

கோமளவல்லியம்மாள் திரும்பினதும், பின்னையும் மாட்டுப் பெண்ணும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு மூலைக்கு ஒருவராக உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். ஒன்றும் புரியாமல் அவள் வாதராஜனிடம் போய், "ஏண்டா, வயிறும் பிள்ளையுமா யிருக்கும் அந்தப் பெண் கண் கலங்க என்னடா சொன்னே?" என்று கேட்டாள்.

"உனக்கென்ன? உங்களுக் குள்ளே ஆயிரம் சண்டை போட்டுக்குவேள்! நான் ஒரு வார்த்தை சொல்லி விட்டால் மட்டும் மாட்டுப் பெண்ணுக்குப் பரிந்துகொண்டு வந்து விடுவாய்!" என்றான் வாதராஜன்.

"அப்படி என்னத்தைத்தான் சொல்லி விட்டாள் அவள்?"

"அந்தப் பக்கத்து வீட்டு சம்பை சுலோ இருக்காளோன்னோ......!"

"இரையாதேடா! அவள் காதில் விழுந்து வைக்கப் போறது!"

வாதராஜன் மாங்காய் மாலையைப் பற்றிச் சொன்னான்.

அதைக் கேட்டுவிட்டுத் தாயார், "இதுக்குத்தானா இவ்வளவு அமர்க்களம்? மணியாட்டமா இருக்கு அந்த மாலே. எங்க நாளிலே இது மாதிரிதான் பண்ணிப் போட்டுக் கொண்டு இருந்தோம். இப்போ பண்ணுகிற சகாசு வேலை யெல்லாம் அப்போது ஏது? அந்த மாதிரி சௌந்தரத்துக்கும் ஒண்ணு பண்ணிப் போட்டுப் பார்க்கணும்னு எனக்கும் ஆசைதான்!"

"சரி, சரி; சும்மா தங்கத்தை அழிச்சு அழிச்சுப் பண்ணிண்டிருந்தால் நகை உருப்



பட்ட மாதிரிதான்! ஒரிரு கையை ஊன்றிக் கொண்டு ஒரு கோடியாய் பண்ணிப் போட்டு விடலாம்னு நேற்றுத்தானே யோசனை பண்ணினோம்? இதற்குள் ..."

"அதைத்தாண்டா நானும் சொல்ல வந்தேன். அந்த நரசிம்மய்யங்கார் வீட்டிலே குடியிருக்கிற பெண் சொல்லித்து! ஏதோ சேவல் ஸாம்லோ, கேவல் ஸாம்லோ வாமே? அங்கே இது மாதிரி வெள்ளியிலே பண்ணித் தங்க மூலாம் பூசி வைத்திருக்கிறாளாம். பதினோரு ரூபாய் சொச்சமாம். காண்பித்தாள், பார்த்தேன். இந்த நாளிலே நாளுக்கொரு பேஷனும், கொடிக்கொரு அலங்காரமுமா யிருக்கே! அதிலே ஒண்ணை வாங்கிக் கொடுப்போம் சௌந்தரத்துக்கு!" என்றாள் தாயார்.


"பதினோரு ரூபாய் மட்டும் என்ன, செடியிலே காய்க்கிறதா? பொழுது போகவில்லை, உனக்கு!" என்று எரிந்து விழுந்தான் வரதராஜன்.

"சரி, விட்டுத் தள்ளு! அய்யங்கார் நாள் குறிச்சிருக்கார். வர புதன்கிழமை முகூர்த்த நாளாம்!"

"ஷேமர்தம், ஷேமர்தம் ஒன்றும் வேண்டாம். ஒரு தரம் பண்ணிக் கொண்டு பலன் கண்டது போதும்!" என்றான் வரதராஜன்.

"அடே, அபசகுனமா உளறாதேடா! என்னமோ அக்கப் பெண் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். சௌந்தரத்தின் குணத்துக்கு அந்த ஏழுமலையான் ஒரு குறைவும் பண்ணமாட்டார்!" என்றாள் கோமளவல்லியம்மாள்.

"உன் இஷ்டம்போல் செய்!" என்று சொல்லி விட்டு, நண்பன் சாரங்கன் வீட்டுக்குக் கிளம்பி விட்டான் வரதராஜன்.



சினிமா பார்ப்பவர் (ஒரு எம். எல். ஏ.விடம்) :— ஏன், ஸார்! இந்த ஸினிமாக் கொட்டகைகளில் எல்லாம் புகை போக்கிக் கூண்டு வைக்க வேண்டுமென்று சட்டசபையிலே நீங்கள் ஏன் ஒரு தீர்மானம் கொண்டுவரக் கூடாது?

இரவு ஒன்பது மணிக்குத் திரும்பினதும் சாப்பிட உட்கார்ந்தான் வரதராஜன். சௌந்தரத்தின் சமையல் என்று தெரிந்தது. தாயார் பரிமாறினாள். அவனுடைய கண்கள் ‘துருதுரு’ வென்று சௌந்தரத்தைத் தேடி யலைந்தன. அவள் தன் கையால் பரிமாறாமற் போகவே சாப்பாடே ருசிக்கவில்லை, அவனுக்கு!

சாப்பிட்டதும் சாரங்கனிட மிருந்து இரவல் வாங்கிவந்த புத்தக மொன்றைப் பிரித்து வைத்துக்கொண்டு தன் அறையில் போய் உட்கார்ந்து கொண்டான். ஆனால், புத்தகத்தில் கவனம் செல்லவில்லை. பின் வரும் சம்பாஷணையில்தான் சென்றது.

“சௌந்தரம், ஒரு பிடி சாப்பிட்டு விட்டுப் படுத்துக்கோ! கர்ப்பிணி, பட்டினி யாய்ப் படுக்கலாகாது!”

“வேண்டாம், அம்மா! எனக்குச் சாதம் வேண்டியிருக்கல்லே! பாலைத் தாருங்கோ, குடிச்சுட்டுப் படுத்துக் கொள்கிறேன்.”

சிறிது நேரம் பொறுத்து மாமியார் “ஏண்டி, உள்ளே போய்ப் படுத்துக்கோயேன்!” என்று பரிவுடன் கூறினாள்.

“அவர் அங்கே விளக்கை வைத்துக் கொண்டு வாசிக்கிறார், கண்ணை உறுத்துறது! இங்கே கூடத்திலே காத்து வாது; இந்தே படுத்துக்கிறேன்!”

இதைக் கேட்டதும் வரதராஜன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

கவிகள் இதைத்தானே ஊடல் என்று சொல்லுகிறார்கள்?

சம்பாஷணை நின்றது. வரதராஜன் புத்தகத்திலே லயித்துப் போனான்.

மணி பத்தாயிற்று; பதினொன்றும் அடித்தது. வரதராஜன் சய னிலைக்கு வந்து புத்தகத்தை மூடி வைத்தான்.


“அவள் ஏன் வரவில்லை?” என்ற கேள்வி அவனையும் அறியாமல் அவன் உள்ளத்தில் எழுந்தது. நேரே கூடத்துக்குப் போய்ப் பார்த்தான்.

கோமளவல்லியம்மாள் தலைக்கு ஒரு கட்டையை வைத்துக்கொண்டு, சால்வையைப் போர்த்திக்கொண்டு, விசுப் பலகையின்மேல் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். மூலையில் ‘அரிக்கன்’ விளக்கு தனித்து வைக்கப்பட்டிருந்தது. அதன் மங்கலான வெளிச்சத்தில் சௌந்தரம் தரையில் படுத்திருப்பதையும், தலைக்கு உயரமாக வைத்துக் கொண்டிருந்த பலகையில் நீர்த் துளிகள் சிந்தியிருப்பதையும் கண்டான். குனிந்து, விரலால் அவள் கண்களைத் தொட்டுப் பார்த்தான்; கண்ணீர்த் துளியொன்று விரலை நனைத்தது. “ஒரு சின்ன விஷயத்துக்காக நீ இவ்வளவு தூரம் வருந்துவதற்கு இடம் கொடுத்து விட்டேனே, வெறும் மூடன் நான்!” என்று அவன் வாய் முணுமுணுத்தது.

அவ்வளவுதான்; சிறு குழந்தை தூக்கத்தில் சிரித்துக் கொள்ளுமே, அது மாதிரி சௌந்தரத்தின் முகத்தில் இளநகை அரும்பிற்று!

மறுநாள் மாலை ஆபீஸிலிருந்து திரும்பின போது வரதராஜனுடைய கோட்டுப் பையில் அந்த மாங்காய் மாலையும், எம்பிராய்டரி நூலும் இருந்தன!

இப்பொழுது மீண்டும் கிடைக்கும்!
பெயர்போன
'ஆடு மார்க்' துணிகள்



பங்களூர் மில்ஸ் துணிகளெல்லாம் இப் பெயர்போன 'ஆடு மார்க்' குடையவைதான் — அவையின் உயர் குணத்திற்கும், உழைப்புத் தன்மைக்கும், சிறந்த பெறுமதிக்கும் இதுவே உங்கள் உத்தரவாதம். சென்ற ஆறு ஆண்டுகளுக்கிடையே நாங்கள் இந்தியாவின் யுத்த முயற்சி காரியங்களில் இரவு பகல் ஓயாமல் முனைந்து வந்துள்ளோம். நீங்களும் போதிய துணிமணிகள் கிடைக்காமல் தவிக்க நேர்ந்தது. ஆனால் இப்பொழுது 'ஆடு மார்க்' ஸூட்டிங்குகளும் ஷர்ட்டிங்குகளும் இதர துணி தினுசுகளும் மீண்டும் வாங்கக் கிடைக்கும். அவை உங்களுக் களிப்பதாவன :—

உயர் ரகம் — 'ஆடு மார்க்' பருத்தி துணிகள் மிக சேர்த்தியான பருத்தியிலிருந்து அபூர்வத் திறமையுடன், இந்தியாவின் சீதோஷ்ண நிலைமைக் குகந்தாற் போல் நெசவு செய்யப் படுபவை.

உழைப்புத்தன்மை — இந்தத் துணிகள் நீடித்துழைக்கும். எவ்வளவு முரடாகச் சலவை செய்யப்பட்டபோதிலும் எளிதில் நாசமாகா.

பெறுமதி — 'ஆடு மார்க்' துணிகளின் விலைகள் அவையின் குணத்திற்கும், உழைப்பிற்குமேற்றவை, நியாயமானவைதான். இத் துணிகள் உங்கள் பணத்திற்குச் சிறந்த பெறுமதியே யென நாங்கள் உத்தரவாத மளிக்கிறோம்.

'ஜெல்லா' ஷர்ட்டிங்குகள் ★ லாங்க்லாத் ★ கோல்ட் லேபல் டாட் ஷர்ட்டிங்குகள் ★ லேடி லாங்க்லாத் ★ சாயம் தோய்த்த லாங்க்லாத் ★ டவ்வேல்கள் ★ ஸெம்ரா ஸூட்டிங்குகள்.

யுத்தகால வேலை விவரம்

யுத்தத்திற்கிடையே பங்களூர் மில்ஸ் சர்க்காருக்கு ஸப்ளை செய்துள்ள பருத்திச் சரக்குகளின் விவரம் பின்வருமாறு:

பாரஷூட் பருத்தி நூல் கயிறுகள்	1,08,142	ராத்தல்
காக்கி ட்ரில்	2,01,49,000	கஜம்
ஜங்கிள் க்ரீன் ஷர்ட்டிங்	2,87,47,534	,,
பாரஷூட் துணி — உணவு ஸப்ளைகள் இறக்கிவிட	1,03,00,000	,,
விமானிகளுக்குள்ள ஷர்ட்டிங்கும், மற்ற துணிகளும்	1,20,45,439	,,

உங்களுக்கு துணிகள் கிடைக்காமலிருந்ததன் காரணம் இதிலிருந்து விளங்கும்!

தயாரிப்போர்கள் :

தி பங்களூர் மில்ஸ்

தி பங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ், கோ., லிட்., பங்களூர் ஸிடி

ஏஜண்டுகள், காரியதரிசிகள் ட்ரெஷரர்கள்

பின்னி & கோ. (சென்னை) லிட்.

'ஆடு மார்க்' உடுப்பதற்கு யோக்கியமான துணிகளின் அறிகுறி

மௌன ரகசியம்

ஸி. ஆர். ஆர். மணி

அடுத்த வீட்டுக்கு யாரோ புதிதாகக் குடி வந்திருந்தார்கள். அவர்கள் எப்போது வந்தார்கள் என்று தெரியவில்லை. ஒரு நாள் காலை திடீரென்று புது முகங்களும் புதுக் குரல்களும் தோன்றவே, இரவோடு இரவாக வந்தவர்கள் என்று தோன்றிற்று.

அவர்கள் வந்து ஒரு வாரமாகியும் அவர்களைப் பற்றிய விவரம் எனக்குத் தெரியவில்லை. ஜயத்தைக் கேட்டதில், "யாரோ செட்டியாராம். மூன்று குழந்தைகளாம். அந்த அம்மா இருக்கிறாளே, வந்து ஒரு வாரம் ஆயிற்றே யொழிய, வாசற் பக்கம் கூட வந்து நின்றதில்லை" என்றாள்.

எனக்கும் அந்த விஷயம் சற்று ஆச்சரியமாய்த்தா னிருந்தது. அவர்கள் வீட்டுப் பேச்சிலும் கூட அந்த மனுஷ்யனின் குரல் தான் ஓங்கி இருக்கும். வீடே இடிந்து போகிற மாதிரி இரைவார் அவர். எங்களுக்கெல்லாம் கூடக் கஷ்டமாகத்தான் இருந்தது. இத்தனைக்கும் அந்த அம்மாள் பதில் பேசுவது சரியாகக் காதிலேயே விழாது. கிணற்றுக்குள்ளே யிருந்து பேசுகிற மாதிரி தான் கேட்கும்.

"இப்படியும் ஒரு மனுஷி உண்டா? மனுஷன் அத்தனை பேச்சுப் பேசுகிறான், பதிலுக்கு ஒரு வார்த்தையாவது பேசாமல் இருக்கிறாளே! பாவம், என்னதான் அதிர்ஷ்டவசமாகத் தனக்கு அத்தனை ஒடுக்கமான மனைவி வாய்த்து விட்டாலும் அவன் ஒரேயடியாய் இப்படியா துள்ளிக் குதிப்பான்!" என்று எண்ணி நான் ஆச்சரியக் கடலில் மூழ்கிப் போனேன்.

ஜயத்துக்கு அவளைப் பற்றி நினைக்க நினைக்கப் பரிதாபம் பொங்கிற்று. "அந்த மனுஷ்யன் என்ன வெல்லாமோ கண்டபடி திட்டுகிறான். சனியன், பீடை என்றெல்லாம் வைகிறான். இத்தனைக்கும் அவள் வாயையே திறக்க மாட்டேனென்கிறாளே! இப்படியும் ஒரு புருஷன்—பெண்சாதி உண்டா?" என்று அங்கலாய்த்தாள்.

இதுதான் சமயம் என்று நான், "பாரம்மா, பார்! பார்த்தாவது கற்றுக் கொள். ஒரு வார்த்தை நான் சொல்வதற்குள் பத்து வார்த்தை பொழிந்து கொட்டுகிறாயே, அந்த உத்தமி ஒரு வார்த்தை அதிரப் பேசுகிறாளா, பார்! அவளல்லவா பெண்!" என்று கூறினேன்.

என்ன பைத்தியக்காரத்தனம் பண்ணி விட்டேன்! ஜயத்துக்கு அடங்காத கோபம் வந்து விட்டது. "என்ன சொன்னேள்? அவள் உத்தமியா? நான்தான் பிடாரியா? அந்த ஜடத்தைப் போல் நானும் இருப்பேன் என்று நினைத்தேளா? ஏன் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டீர்கள்? அவளைப் போல் ஓர் உத்தமியாகப் பார்த்துக் கல்யாணம் செய்து கொள்கிறதுதானே? அப்போது எங்கே போச்சு, மூளை?" என்றெல்லாம் குதிக்க ஆரம்பித்து விட்டாள்.

இந்த ஆவேச மெல்லாம் ஓடட்டும் என்று வெளியே போனேன். கால் போன வழி யெல்லாம் நடந்தேன். சேச்சீ, என்ன ஜன்மம்! தைரியமாக ஒரு வார்த்தை சொல்வோமென்பதற்குக் கூட அல்லவா வழியில்லை? அந்தச் செட்டியாரிடம் ஏதோ சக்தி யிருக்க வேண்டும்; இல்லாவிட்டால் அவர் திட்டுகிற திட்டை யெல்லாம் ஒரு பெண் கேட்டுக் கொண்டிருந்து விட்டு அப்படிப் பேசாமல் இருப்பாளா? அவரைக் கேட்டு அந்த ரகசியத்தைத் தெரிந்து கொண்டால்தான் என்ன?

இந்த முடிவுக்கு வந்ததும் செட்டியாரிடம் எப்படிப் பரிச்சயம் பண்ணிக் கொள்வதென்று யோசனை பண்ணிக் கொண்டே வந்தேன். நல்ல வேளையாக அவர் வாசல் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

என்னை அவருக்கு அறிமுகம் செய்து கொண்டு எதிர்த் திண்ணையில் உட்கார்ந்தேன். பேச்சு வாக்கில் செட்டியார், "ஸார், உங்களுக்குத் தெரிந்த நல்ல இ. என். டி. டாக்டர் யாராவது இருந்தால் சொல்லுங்களேன்!" என்றார்.

"ஏன், யாருக்கு என்ன உடம்பு?" என்று கேட்டேன்.

"நம்ம சம்சாரத்துக்குத்தான், ஸார்! அவளுக்குச் சுத்தமாய்க் காது கேட்கிறதே யில்லை. கத்திக் கத்தித் தொண்டை யெல்லாம் புண்ணாய்ப் போகிறது! ஆறு மாசத்துக்கு முன்னால் அரைச் செவிடாக இருந்தது. எவனோ கற்றுக் குட்டி டாக்டர் மருந்து போடுகிறேன் என்று முழுச் செவிடாக்கி விட்டான்!" என்றார் அவர்!



உலகெங்கிலும்
மிகவும் போற்றப்
பெற்றது!
ஸிரோலின்
'ரோச்'
சுவாஸகோச
உபாதைகளுக்கு சிறந்தது



'ஆஸ்ப்ரோ'
இதோ வந்துவிட்டது!
ASPRO
MADE IN ENGLAND
போலிகளை வாங்காதீர்கள்.
ஒவ்வொரு வில்லையின்மேலும்
'ஆஸ்ப்ரோ' என்ற வார்த்தை
இருப்பதைக் கவனிக்கவும்
'ஆஸ்ப்ரோ' வலியையும்
ஜுரத்தையும் 10 நிமிஷங்க
ளில் போக்கும். இருத
யத்துக்காவது வயிற்
றுக்காவது கெடுதி
செய்யாது
'ஆஸ்ப்ரோ'
கட்டுப்பாடு செய்யப்பட்ட
விலைகள் :
3 வில்லைகள் கொண்ட
பாக்கட் . . . 1 அணா
30 வில்லைகள் கொண்ட
பாக்கட் . . . 10 அணா
'ஆஸ்ப்ரோ'
எங்கும் கிடைக்கும்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at The "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk Madras

கல்கி



KALKI டிஸம்பர் 29, 1946 4 அண

ரீடா கேசவளர்ச்சிக்கான ஜீவ சக்தி வாய்ந்த ஓர் ஆகாரம். இது சிரசை ஆரோக்யமாக வைத்து, அழுக்கை விழுவதைத் தடுத்து, மயிர் உதிர்வதை நிறுத்தி, பால்யத்தில் ஏற்படும் நரையையும் அறவே நிறுத்தி விடுகிறது.



ரீடா கேசத்திற்கு அதன் இயற்கையான சத்துவத்தை மீண்டும் அளித்து, கேசத்திற்குப் பலமளித்து வளர்ச்சி யளிக்க வல்ல பொருள்களை மயிர்க்கால்கள் எளிதில் ஏற்றுக் கொள்ளும் வகையில் ஆச்சர்யமான ரூபத்தில் சப்ளை செய்து கேச வளர்ச்சியை விருத்தி செய்கிறது.

ரீடா ஆரோக்யமான கேசவளர்ச்சிக்கு இடைஞ்சலாக உள்ள எல்லாவற்றையும் திருத்தி விடுகிறது. ஆயிரக் கணக்கான வர்கள் ரீடா உபயோகித்து அபார நன்மை யடைந்துள்ளனர். இன்றே ரீடா உபயோகியுங்கள். இந்தியாவில் எங்கும் கிடைக்கும்.

ஒரு பாட்டில் விலை அணா 15/-

RITA
HAIR TONIC



அழகிய கேசத்தை வளர்க்கிறது

குழந்தைகளின் சால் குலைக்கட்டி வியாதிகளுக்கு ஜம்மியின் "லிவர்க்யூர்"

அறிவிப்பு

பிரபல சால், குலைக்கட்டி வைத்திய நிபுணர் ஜம்மி வெங்கட்ராமணய்யாவின் குமாரர் கீழ்க்கண்ட இடங்களுக்கு விஜயம் செய்கிறார். சால், குலைக்கட்டி சம்பந்தமான வியாதிகளுக்கு அவரிடம் நேரில் கீழ்க்கண்ட நேரப்படி சந்தித்து ஆலோசனை செய்து கொள்ளலாம்.

இடம்	தேதி	விலாசம்
பழனி	31—12—46 மாலை 2 மணி முதல் 5 வரை	ஸ்ரீ ஷண்முகானந்த பவன் லாட்ஜ், ரயில்வே பீடர் ரோடு.
திண்டுக்கல்	1—1—47 காலை 9 மணி முதல் 12 வரை	டிராவலர்ஸ் பங்களா (ரயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபம்)
விருத்தாசலம்	3—1—47 காலை 9 மணி முதல் 12 வரை	ஸ்ரீ நடராஜா மெடிகல் ஹால்.
கடலூர்	4—1—47 காலை 8 மணி முதல் 11 வரை மாலை 3 மணி முதல் 5 வரை	மெஸர்ஸ் காமா அண்டு கோ., கெமிஸ்ட்ஸ், புதுபாளையம்.
திருக்கோயிலூர்	5—1—47 மாலை 3 மணி முதல் 6 வரை	மெஸர்ஸ் மெடிகல் ஸ்டோர்ஸ், பெருமாள் கோவில் சந்நிதி தெரு.

கீழ்க்கண்ட இடங்களுக்கும் விஜயம் செய்வார்:
திருவண்ணாமலை—6-1-47; வேலூர்—7-1-47; காஞ்சீபுரம்—8-1-47;
செங்கல்பட்டு—9-1-47

ஜம்மி வெங்கட்ராமணய்யா & ஸன்ஸ்

மதராஸ் — திருச்சிராப்பள்ளி — கும்பகோணம்

சமயத்தில் வேண்டுவது பலசாலியான மனிதரே!



ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானங்கள்,
ஆந்திர ஜில்லாக்கள் தமிழ் நாடு
களுக்கு ஏஜண்டுகள்:

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பெர்ஹாம்பூர், செகந்திராபாத்,
பெஜவாடா, மதுரை

சீக்கிரமாக செளக்யமாக மூக்கினுள் ஏற்படும் அடைப்புகள் தவிர்க்கப்படும்



ஜலதோஷம், தலைகனம் ஆகியவற்றால் ஏற்படும் அவஸ்தையை அகற்ற 'கர்ஸோட்ரைன்' ஒரு நவீன சாதனமாகும். குழாயை படத்திலுள்ளபடி ஒவ்வொரு நாசித் துவாரத்திலும் வைத்து சுவாஸத்தை இருமுறை உள்ளே இழுக்க வேண்டும்.

நூதன 'இன்ஹேலர்' பையிலோ பர்ஸிலோ சுலபமாக எடுத்துச் செல்லக் கூடியது.

திருப்திகரமான குணம் 30 வினாடிகளில் தெரிய வரும். மூக்கிலுள்ள மெல்லிய தோலின் வீக்கத்தை வாடிய வைத்து சுவாஸ வழியிலுள்ள அடைப்புகளை அகற்றி தலையிலுள்ள கனத்தை அகற்றுகிறது. கர்ஸோட்ரைன் உபயோகத்திற்கும் எடுத்துக்கொண்டு போவதற்கும் மிகவும் எளிதானது. அணுக முடியாத இடங்களுக்கு கர்ஸோட்ரைன் ஆவிகள் சென்று ஆறுதலளிக்கின்றன. கர்ஸோட்ரைனை உபயோகித்து சுலபமாக சுவாசியுங்கள். குளிர் ஜுரம், தலை பாரம், ஆஸ்துமா முதலிய உபாதைகளுக்கு சிபார்சு செய்யப்படுகிறது.

கர்ஸோட்ரைன்

இங்கிலாந்தில்
E. கிரிப்பீத் ஹக்ஹேஸ் கம்பெனி
லிமிடெட்டாரால் தயாரிக்கப்பட்டது.

K. S. D. 4

REGD. NO. M. 4392



மதராஸ் ஸிடி ஏஜன்ட்ஸ்: சக்தி டிரேடிங் கம்பெனி
581, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்